Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk

FRIDAY, FEBRUARY 25, 2022

பக்கம்:08 | நகரப்பதிப்பு

# இன்றும் மின்வெட்டு நேரமும் அதிகரிப்பு

**நீர்வெட்டு அமலாகும் அபாயம்**

நாடளாவிய ரீதியில் இன்று (25) ஐந்து மணி 15 நிமிடங்களுக்கு மின்வெட்டு அமல்படுத்தப்படும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. இந்நிலையில், கொழும்பில் மின்வெட்டு அமுல்படுத்தப்படுமாயின், நீர்வெட்டும் அமுலாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

# ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக தமிழ் எம்.பிகள் ஆர்ப்பாட்டம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பிலுள்ள ஜனாதிபதி அலுவலகத்துக்கு முன்பாக, நேற்று (24) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மற்றும் கிழக்கில் தொல்லியல் திணைக்களம், மகாவலி அதிகார சபை, வனத்துறை உள்ளிட்ட துறைகளால் மக்களது காணிகள் அபகரிக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. "தொல்பொருள் என்ற போர்வையில் தமிழரின் நிலங்களையும் கலாசாரத்தையும் அபகரிப்பதை நிறுத்து" என்ற பதாகைகளை மும்மொழியிலும் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2









# கணிசமாக அதிகரித்தது மசகு எண்ணெய் விலை

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் உக்ரைனின் கிழக்கு டொன்பாஸ் பகுதியில் சிறப்பு இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்ததையடுத்து, உலக சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 100 அமெரிக்க டொலர்களைத் தாண்டியுள்ளது.

தொடர்ச்சி P2

# ரயிலில் மோதி யாழில் இளம்பெண் பலி

யாழ்.கொக்குவில் ரயில் நிலையத்துக்கு அருகில் ரயிலில் மோதி 22 வயதான இளம்பெண் உயிரிழந்துள்ளார்.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு சென்ற குளிரூட்டப்பட்ட ரயில் மோதியே அப்பெண் உயிரிழந்துள்ளார். இச் சம்பவத்தில் அதே பகுதியை சேர்ந்த ராஜ்குமார் ஜெயந்தி என்ற இளம்பெண்ணே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த பெண்ணின் தந்தை ராஜ்குமார் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## ரஷ்யா– உக்ரேன் கடும் மோதல்



# அச்சத்தில் உலகம்

ரஷ்யாவுக்கும் உக்ரேனுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல், மூன்றாவது உலக யுத்தத்துக்கு வழிசமைத்துவிடுமோ என, உலக நாடுகள் அச்சம் கொண்டுள்ளன. ஆகையால்தான், சமரசத்தில் முடித்துக்கொள்ளவேண்டும் என பல நாடுகளும் அவ்விரு நாடுகளிடமும் கேட்டுள்ளன.

மொஸ்கோ நேரப்படி, நேற்று (24) வியாழக்கிழமை அதிகாலை 5.55 மணிக்கு உக்ரேனுக்கு இராணுவ தாக்குதலை நடத்துவதற்கான அறிவிப்பை, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் அறிவித்தார்.

தொலைக்காட்சி ஊடாக அறிவிப்பு விடுக்கப்பட்ட சில நிமிடங்களுக்குப் பிறகு உக்ரேனில் முதல் ஷெல் மற்றும் ஏவுகணைகள் ஏவப்பட்டன.

ரஷ்ய படைகள், தங்கள் நாட்டு கொடியை உக்ரைனில் ஒடேஸாவில் ஏற்றினர். கிவ், கிர்காவ் பகுதிகளை தாண்டி ஒடேஸாவுக்கும் ரஷ்ய படைகள் வந்துவிட்டன. இதனால் அடுத்து என்ன நடக்கும் என்ற அச்சத்தில் உக்ரைன் மக்கள் இருக்கிறார்கள்.

தாக்குதல்கள் நடத்தப்படும் இடங்களிலிருந்து மக்கள் வெளியேற தொடங்கினர். தங்களுடைய பாதுகாப்பை கருத்தில் கொண்டு பலரும் வாகனங்களின் ஊடாக பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்கின்றனர்.

தொடர்ச்சி P2




## வேலணை பிரதேச சபையில்

# வடக்கு ஆளுநருக்கு எதிராக தீர்மானம்

எம்.றொசாந்த்

யாழ். தீவகப் பெண்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ள கருத்து மிகுந்த மன வேதனையை தந்துள்ளது என சுட்டிக்காட்டி வேலணை பிரதேச சபையில் கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## கல்முனை நீதிமன்றில் சஹ்ரான் மனைவி ஹாதியா:

# மே 27 வரை வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

அஸ்லம் எஸ்.மௌலானா

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் தற்கொலைதாரி சஹ்ரான் ஹாஷிமின் மனைவியான அப்துல் காதர் பாத்திமா ஹாதியாவுக்கு எதிராக கல்முனையில் உள்ள மாகாண குற்றவியல் மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணை எதிர்வரும் மே மாதம் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# அரசியல் இருப்புக்கான நாடகம்

எஸ்.நிதர்ஷன், எஸ் தில்லைநாதன்

தமது பங்காளித்துவத்துடன் முன்னெடுக்கப்பட்ட நல்லாட்சி காலத்தில், ஆரம்பிக்கப்பட்ட இக்காணி கையகப்படுத்தல்களை கட்டுப்படுத்த முடியாதவர்கள் எனத் தெரிவித்துள்ள ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதன், தற்போது ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக வேகாத வெய்யிலில் அமர்ந்திருந்து கோசங்களை எழுப்பியும் பதாதைகளையும் தாங்கியும் ஊடக கவனத்தை பெற்று தமது அரசியல் இருப்புக்கான நாடகமொன்றை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2

# விசேட பிரமுகர்களுக்கு மின் வெட்டிலிருந்து விலக்கு

கொழும்பில் விசேட பிரமுகர்கள் வசிப்பிடங்களை வைத்திருக்கும் பல பகுதிகளில் மின்வெட்டு அமல்படுத்தப்படவில்லை என நுகர்வோர் சுட்டிக்காட்டியுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மின் வெட்டுக்கு எதிராக

# டோர்ச் லைட் அடித்து எதிர்க்கட்சி ஆர்ப்பாட்டம்

பா.நிரோஸ்

நாட்டில் தொடர்ந்து அமல்படுத்தப்படும் மின்வெட்டுக்கு கடும் எதிர்ப்பை தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தியினர் டோர்ச் லைட்களுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் சபையில் பெரும் பதற்றம் ஏற்பட்டதால், சபை நடவடிக்கைகள் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சபாநாயகர் தலைமையிலான நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு ஒழுங்குப் பிரச்சினை



தொடர்ச்சி P2

# இது ஆரம்பம்: ஜனாதிபதியின் வீட்டையும் முடக்குவோம்

ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட முடியவில்லை என்றால், வடக்கு, கிழக்கில் போராட்டத்தில் ஈடுபவர்கள் எவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுப்பார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது என தமிழ்த் தேசிய




தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஜனாதிபதி அலுவலகத்துக்கு முன்பாக தமிழ் எம்.பிக்கள் ஆர்ப்பாட்டம்

இதில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், எஸ்.சிறிதரன் உட்பட 8 பாராளுமன்ற உறுப்பினர்களும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் 2 பாராளுமன்ற பினர்களும் பங்கேற்றிருந்ததுடன், அவர்களுடன் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி தலைவர் சி.வி விக்னேஸ்வரனும் கலந்துகொண்டிருந்தனர். இந்த போராட்டத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் எம்.பியுமான மனோ கணேசனும் கலந்துகொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கணிசமாக அதிகரித்தது மசகு எண்ணெய் விலை

கடந்த 7 வருடங்களுக்குப் பின்னர் உலக சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதாரத் தடைகள் மற்றும் ரஷ்ய எரிவாயுக் குழாயைத் தடுப்பதற்கான நகர்வுகளுக்கு மத்தியில் இந்த வார தொடக்கத்தில் விலைகள் அதிகரித்திருந்தன.

சவூதி அரேபியாவிற்கு அடுத்தபடியாக மசகு எண்ணெய் ஏற்றுமதி செய்யும் இரண்டாவது பெரிய நாடு ரஷ்யாவாகும் என்பதுடன், உலகின் மிகப்பெரிய இயற்கை எரிவாயு ஏற்றுமதியாளராகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யா– உக்ரேன் கடும் மோதல்

# அச்சத்தில் உலகம்

வெளியேற முயற்சித்ததால், பல கார்கள் வரிசை கட்டி நிற்கின்றன.

உக்ரைன் மீது அதிகாலை முதலே ரஷ்யா தாக்குதல்களை நடத்தி வருகிறது. உக்ரைனில் வான்வழியாக தாக்குதல் நடத்திய நிலையில் அங்குள்ள விமான தளங்கள், இராணுவ தளங்களை ரஷ்யா அழித்துவிட்டது என்றும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

பதிலுக்கு ரஷ்யாவின் 5 போர் விமானங்கள் மீது உக்ரைன் தாக்குதல் நடத்தி வீழ்த்தியுள்ளது. தொடர்ந்து ஓயாமல் குண்டுகளும் துப்பாக்கிச் சூடுகளும் வெடித்துக் கொண்டே இருப்பதால் மக்கள் பீதியில் உறைந்துள்ளனர் என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கின்றது.

கிழக்கு உக்ரைனில் ரஷ்ய கிளர்ச்சியாளர்கள் முன்னேறியுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 10 பேர் பலியாகிவிட்டதாகவும் மேலும் ரஷ்யாவை சேர்ந்த 50 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டதாகவும் உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது.

"உக்ரேனின் இராணுவ கட்டமைப்பு மற்றும் எல்லை பாதுகாப்புப் பிரிவுகள் மீது ரஷ்யா முதலில் தாக்குதலை ஆரம்பித்தது" என உக்ரேன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

விமானப்படை தாக்குதல் நடைபெறுவதை உணர்த்தும் எச்சரிக்கை ஒலி கீஃப் முழுவதும் ஒலித்ததைத் தொடர்ந்து மக்கள் மெட்ரோ நிலையங்களில் அடைக்கலம் புகுந்தனர். பெரும்பாலானோர் தங்கள் உடைமைகளையும் கொண்டு வந்தனர்.

ரஷ்யாவின் 5 விமானங்கள் மற்றும் ஒரு ஹெலிகொப்டரை சுட்டு வீழ்த்தியதாக, உக்ரேன் ஆயுதப்படைகள் தெரிவித்துள்ளன. "அமைதியாக இருங்கள். உக்ரேன் ஆதரவாளர்களை நம்புங்கள்" என, உக்ரேன் ஆயுதப்படை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், ரஷ்ய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக யுக்ரேன் கூறுவதை ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் மறுத்துள்ளது.

யுக்ரேன் நகரங்களை தாங்கள் தாக்கவில்லை என்றும், விமானத் தாக்குதல் தடுப்பு வசதிகள், துல்லியத் தாக்குதல் நடத்தும் விமானப் படை ஆயுதங்கள் போன்ற .ராணுவ இலக்குகளையே தாக்குவதாகவும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வியாழன் அன்று, ஜி7 தலைவர்களைச் சந்திப்பதாகவும் அமெரிக்காவும் நட்பு நாடுகளும் "ரஷ்யா மீது கடுமையான தடைகளை விதிக்கும்" என்றும் கூறிய அவர், "உக்ரேனுக்கும் அதன் மக்களுக்கும் நாங்கள் தொடர்ந்து ஆதரவையும் உதவியையும் வழங்குவோம்," என்று கூறினார்.

"அமெரிக்காவும் ரஷ்யாவும் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொள்ள ஆரம்பித்தால், அது ஓர் உலகப்போர் தான்," என்று இம்மாதம் குறிப்பிட்ட அமெரிக்க அதிபர் ஜோ பைடன், தாம் எந்தச் சூழலிலும் அமெரிக்கத் துருப்புகளை உக்ரேனுக்கு அனுப்பப் போவதில்லை என்று தெரிவித்தார்.

ஆனால் ரஷ்யா உக்ரேனை முழுதாக ஆக்கிரமிக்கக் கூடுமென மேற்கத்திய தலைவர்கள் அஞ்சுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மே 27 வரை வழக்கு விசாரணை...

**சட்டமா அதிபர் திணைக்களத்தினால் பாத்திமா ஹாதியாவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப் பத்திரிகையின் தமிழ் மொழிபெயர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்ற காரணத்தை முன்வைத்தே விசாரணை ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.**

இவ்வழக்கு நீதிபதி ஜெயராம் ரொக்ஸி முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அவர் மேற்படி தினத்திற்கு விசாரணையை ஒத்திவைப்பதாக அறிவித்தார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் பாத்திமா ஹாதியாவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப் பத்திரிகையின் தமிழ் மொழிபெயர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்ற காரணத்தை முன்வைத்தே விசாரணை ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

சஹ்ரான் ஹாஷிம் மற்றும் புலஸ்தினா ஆகியோரின் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பில் அறிந்திருந்தும் அத்தகவல்களை வெளிப்படுத்தாமல் மறைத்திருந்தமை தொடர்பாக இவர் மீது குற்றம் சுமத்தி, வழங்கப்பட்ட குற்றப் பத்திரிகை தமிழ் மொழியில் வழங்கப்பட வேண்டும் என்று கடந்த ஜனவரி மாதம் 10ஆம் திகதி இடம்பெற்ற அமர்வில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டே நேற்றைய தினம் வரை இவ்வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து சாய்ந்தமருது பொலிவேரியன் நகரில் 2019 ஏப்ரல் 26ஆம் திகதி இடம்பெற்ற சஹ்ரான் கும்பலின் தற்கொலை குண்டுத் தாக்குதலையடுத்து, அங்கிருந்து கைது செய்யப்பட்ட பாத்திமா ஹாதியா, கொழும்பு பயங்கரவாத தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கல்முனை நீதிமன்ற வளாகத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

# அரசியல் இருப்புக்கான நாடகம்

"தமிழர்களின் பிரச்சனைகளை வைத்து அரசியல் நாடகங்களை மேற்கொள்ளாமல் தூய மனதுடனும், நேர்மையுடனும் செயற்பட வேண்டும். மாறாக நாம் தீர்வை நோக்கி நகரும் போது தமக்கும் அதில் அரசியல் ஆதாயம் கிடைக்கவேண்டும் என இவ்வாறான போராட்டங்களை மேற்கொள்வது மக்களை ஏமாற்றும் செயலாகும்" என்றும் தனது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் தொல்லியல் துறை, மகாவலி அதிகாரசபை, வனத்துறை உள்ளிட்ட துறைகளினால் மக்களது காணிகள் கையகப்படுத்தப்படுவது தொடர்பில் உரிய கரிசனையோடு நாம் செயற்பட்டு வருகின்றோம். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவர் என்ற அடிப்படையில், யாழ் மாவட்டத்தில் அபிவிருத்திகளை முன்னெடுக்கும்போது இத்தகைய காணி கையப்படுத்தல்களால் நாம் பெரும் சாவல்களை சந்திக்கின்றோம் என தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளோம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பாகங்களோடு ஒப்பிடுகையில் வடக்கு கிழக்கில் மக்கள் இந்த காணி கையகப்படுத்தலினால் அதிகம் பாதிப்புறுகிறார்கள் என்பதோடு, பிரதேச சூழ்நிலைகளையும், மக்களின் வாழ்வாதாரத்தையும் கருத்தில் கொண்டு இவை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் மக்கள் பிரதிநிதியாகவும், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவர் என்ற அடிப்படையிலும் வலியுறுத்தி வந்துள்ளேன் என குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரிடம் தொடர்ச்சியாக தெரியப்படுத்தி, இவ்விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக துறைசார் அமைச்சர்களை வடபகுதிக்கு அனுப்பி வைக்குமாறு கோரிக்கைகளை முன்வைத்திருந்தேன் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்திருந்த நீதி அமைச்சர் அலி சப்ரி அவர்களுடன், யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற காணி விடயங்கள் தொடர்பான கலந்துரையாடலில் இவ்விடயம் தொடர்பில் விரைவில் எமது மக்களுக்கு தீர்வு வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தியிருந்தேன்.

இந்நிலையில், காணி கையகப்படுத்தல் விடயத்தில் உள்ள சிக்கல்கள் மற்றும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பில் நேரில் ஆராய்வதற்காக அங்கஜன் இராமநாதன் அழைப்பின் பேரில் வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் ரத்நாயக்க எதிர்வரும் மார்ச் மாதத்தின் முதல்வாரத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விசேட பிரமுகர்களுக்கு மின் வெட்டிலிருந்து விலக்கு

திட்டமிடப்பட்ட மின்வெட்டுகளில் இருந்து, குறிப்பாக கொழும்பு நகரின் பல பகுதிகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் மேலும் தெரிவிக்கையில், கொழும்பு 01 முதல் 10 வரையான பகுதிகளில் மின்வெட்டு அமுல்படுத்தப்படவில்லை என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதன்மூலம், எந்தவொரு பாகுபாடும் அல்லது விருப்பமும் இல்லாமல் அனைத்து நுகர்வோருக்கும் நியாயமான மற்றும் சமத்துவத்துடன் மின் விநியோகத்தை வழங்குமாறு ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது என்று ரத்நாயக்க தெரிவித்தார்.

வைத்தியசாலைகள் போன்ற முக்கியமான கட்டடங்கள் உள்ள பகுதிகளுக்கு மட்டும் திட்டமிடப்பட்ட மின்வெட்டுகளில் இருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்று ஆணைக்குழு மேலும் அறிவுறுத்தியது.

இதேவேளை, திட்டமிட்டபடி எந்தவொரு பிரதேசத்திலும் மின்வெட்டு அமுல்படுத்தப்படாவிட்டால் முறைப்பாடுகளை முன்வைக்குமாறு மின்சக்தி அமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா நுகர்வோருக்கு அழைப்பு விடுத்துள்ளார். வாடிக்கையாளர்கள் 1987 என்ற ஹொட்லைன் மூலம் அமைச்சை தொடர்பு கொண்டு தங்களது முறைப்பாடுகளை பதிவு செய்யலாம் என்றார்.

இதேவேளை, கொழும்பு 01 தொடக்கம் 15 வரையான பகுதிகளில் நேற்று (24) முதல் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டோர்ச் லைட்...

எழுப்பி உரையாற்றிய அமைச்சர் தினேஷ் குணவர்தன,

"பாராளுமன்ற உறுப்பினர்கள் நுழைவாயிலில் எம்.பிகளை சோதனையிடும்போது எதிர்க்கட்சி எம்.பி ஒருவரிடமிருந்து பொருளொன்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர். எனினும் இதனை சபைக்குள் எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டுமென இதன்போது பொலிஸாருடன் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாரியளவில் முரண்பட்டுள்ளனர். எதிர்க்கட்சியினரின் இதுபோன்ற செயற்பாடுகளால் பாராளுமன்றப் பாதுகாப்பு, உறுப்பினர்களுக்கான வரப்பிரசாதம் என்பன கேள்விக்குறியாகியுள்ளது" என்றார்.

"இதுபோன்ற பொருட்களினுள் ஏதேனும் மறைத்து வைத்திருக்கிறார்களா? என்பதை, இரசாயன சோதனையின் ஊடாகவே கண்டறிய முடியும். இது ஒட்டுமொத்தப் பாராளுமன்றத்தின் பாதுகாப்புப் பிரச்சினை. எனவே இச்சம்பவம் தொடர்பில் சபாநாயகர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் இதுபோன்ற பொருள்கள் சபைக்குள் எடுத்து வருவதை தடை செய்ய வேண்டும்" எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்துக்குப் பொருத்தமற்ற, அவசியமற்ற பொருள்களை பாராளுமன்றத்துக்குள் எடுத்து வருவதைத் தவிர்க்க வேண்டும் என கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என சபைக்கு அறிவித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, எதிர்காலத்திலும் இத்தீர்மானத்தை தொடர்ந்து பின்பற்ற வேண்டும் எனவும் எம்.பிகளுக்கு அறிவுறுத்தினார்.

# இது ஆரம்பம்: ஜனாதிபதியின் வீட்டையும் முடக்குவோம்

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

காணி அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

ஜனாதிபதி செயலக வளாகத்தில் நேற்று (24) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

போராட்டத்தில் பங்கேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "நேற்றைய தினம் நான் ஊடகங்கள் ஊடாக அரசாங்கத்திற்கு ஒரு செய்தியினை சொல்லிருந்தேன். ஆதாவது தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வினை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் தவறினால் ஜனாதிபதி செயலகத்தினையோ அல்லது ஜனாதிபதியின் வீட்டினையோ முற்றுகையிடுவோம் என தெரிவித்திருந்தேன்.

இன்றைய தினம் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களாக நாம் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக கூடியுள்ளோம். இது ஆரம்பம் மாத்திரமே. எமது கோரிக்கையினை நிறைவேற்ற தவறினால் ஜனாதிபதியின் வீட்டினை முடக்குவோம் என்பதனை கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

அதேபோன்று இங்கு நாம் போராட்டத்தினை முன்னெடுக்கும் போது, ஊடகவியலாளர்கள் இல்லாத சிலர் வந்து எங்களை புகைப்படம் எடுக்கின்றனர். தமிழ் மக்களின் வாக்குகளினால் தெரிவுசெய்யப்பட்டுள்ள எங்களுக்கே இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது என்றால், வடக்கு, கிழக்கில் போராட்டத்தில் ஈடுபவர்கள் எவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுப்பார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது." எனத் தெரிவித்துள்ளார்.

# உண்ணாவிரதம் இரண்டாவது நாளாகவும் தொடர்கிறது

மனிதாபிமான அடிப்படையில் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து அரசியல் கைதிகளின் உறவுகள் இரண்டாவது நாளாக ஆளுநர் அலுவலகம் முன்பாக உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் மூவர் தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் நேற்றையதினம் அவர்களை சந்தித்த உறவினர்கள் வடமாகாண ஆளுநருடன் இடம்பெற்ற கலந்துரையாடல் தொடர்பாக தெரிவித்ததுடன் உண்ணாவிரதப் போராட்டத்தை நிறைவுக்கு கொண்டுவருமாறு வலியுறுத்தினர்.

இந்நிலையில் எமக்கு நியாயம் கிடைக்கும் வரை உண்ணாவிரத போராட்டத்தை கைவிடமாட்டோம் என கைதிகள் தெரிவித்ததையடுத்து உறவினர்களும் அவர்களுக்கு ஆதரவாக வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதனிடையே தனது அலுவலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை தொடர்பு கொண்ட வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா போராட்டத்தை கைவிடுமாறு வலியுறுத்தியதுடன்

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுவரும் அரசியல் கைதிகளை சிறையில் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி தருவதாக வாக்குறுதி கொடுத்தார்.

# வடக்கு ஆளுநருக்கு எதிராக தீர்மானம்

வேலணை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் கருணகரகுருமூர்த்தி தலைமையில் நேற்று (24) நடைபெற்றது.

அதன் போது, பிரதேச சபை உறுப்பினர் மேரி மரில்டா, ஆளுநர் தெரிவித்ததாக வெளியான செய்தியை சுட்டிக்காட்டி கண்டன தீர்மானம் ஒன்றை கொண்டுவந்திருந்தார்.

அதனை சபையின் அனைத்து உறுப்பினர்களாலும் ஆளுநரது குறித்த விடயம் கண்டிக்கப்பட்டதுடன் அதற்கு அவர் மன்னிப்பு தெரிவித்து செய்தி வெளியிட வேண்டும் என்ற தீர்மானத்தையும் ஏகமனதாக நிறைவேற்றி அதை அளுநருக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறும் தீர்மானித்திருந்தனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் , யாழ். தீவகப் பகுதிகளில் சில இடங்களில் பெண்கள் சமூகத்துக்கு விரோதமான நடத்தைகளுக்குத் தள்ளப்படுவது மிகவும் வருத்தமளிக்கும் நிலையில், அவ்வாறான பெண்களுக்கு உதவுவதற்குத் தயாராக இருப்பதாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்ததாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்தன.



பா. நிரோஸ்

# பெட்ரோல், டீசலுக்கு நாள் குறித்தார் கம்மன்பில



அடுத்த மூன்று மாதங்களுக்கு தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு 1285.50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாக தெரிவித்த வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, இந்த நிதியை திரட்டுவதற்கான முயற்களில் தாம் இறங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (24) அமர்வில் கலந்துகொண்டு எதிர்க்கட்சி தலைவர் எழுப்பியக் கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், நாட்டில் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனை நாம் மறுக்கவில்லை. நாட்டை ஆட்சி செய்த அனைவரும் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறையால், எரிபொருள் பெற்றுக்கொள்வதற்க எமக்கு மிகக் கடினமாக உள்ளது என்றார்.

நாட்டின் தற்போதைய நிலையில் பெட்ரோல் - 92 பத்து நாட்களுக்கும், பெட்ரோல் 95 நாற்பது நாட்களுக்கும், டீசல் எட்டு நாட்களுக்கும், சூப்பர் டீசல் எட்டு நாட்களுக்குமே கையிருப்பில் உள்ளது. இதேவேளை மேலும் 6 நாட்களுக்கு தேவையான டீசல் தற்போது இறக்குமதி செய்யப்படுகின்றது எனவும் தெரிவித்தார்.

வடக்குக் கிழக்கில்

# பௌத்த– சிங்கள மயமாக்கல் தொடர்கிறது



தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்பட்டு வடக்குக், கிழக்கில் பௌத்த- சிங்கள மயமாக்கல் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

**“ தமிழர் தேசத்து க்கும் சிங்கள தேசத்துக்கும் இடையிலானப் பிரச்சினை கடந்த 74 வருடங்களாக தொடர்ந்து, முன்னெடுக்கப்படுகிறது. இதனால் எங்கள் மீது இனவழிப்பு யுத்தத்தையும் தற்போதைய ஜனாதிபதியே முன்னெடுத்தார்**

பாராளுமன்றத்தில் நேற்று (24) நடைபெற்ற தாவர, விலங்கினப் பாதுகாப்புத் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், தமிழர்களின் தயாகமாக வடக்குக், கிழக்கில் காணிகள் அபரிக்கப்பட்டு திட்டமிட்டவகையில் சிங்கள பௌத்தமயமாக்கள் தொடர்ந்து முன்னெ டுக்கப்படுகிறது. வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் ஆகிய திணைக்களங்கள் தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து சிங்கள- பௌத்த மயமாக்கல் முன்னெடுக்கிறது என்றார்.

தமிழர் தேசத்துக்கும் சிங்கள தேசத்துக்கும் இடையிலானப் பிரச்சினை கடந்த 74 வருடங்களாக தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது. இதனால் எங்கள் மீது இனவழிப்பு யுத்தத்தையும் மேற்கொண்டிருந்தீர்கள். தற்போதைய ஜனாதிபதியே இந்த யுத்தத்தை முன்னெடுத்தார் எனவும் தெரிவித்தார்.

பொறுப்புள்ள மூத்த அமைச்சர்கள் கூட எங்களது போராட்டங்களை புரிந்துகொள்ளாது, நாங்கள் சர்வதேச கவனத்தையீர்த்து கொள்வதற்காக போராடுவோம் என கூறுவது, நீங்கள் இன்னும் உங்களின் கடந்தக் காலத் தவறை திருத்தவில்லை. இது தொடர்பில் சிந்தித்து தவறை திருத்திக்கொள்ள முயற்சிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

எங்கள் மீதான ஆக்கிரமிப்புகளை முன்னெடுத்து சிங்கள -பௌத்த மயமாக்கல் ஊடாக பெரும்பான்மை மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ளும் அணுகுமுறையை மாற்றுங்கள் எனவும் தெரிவித்தார்.

தமிழர்களின் பூர்வீக நிலங்களில் அரச திணைக்களங்கள்

# 70 சதவீதத்தை அபகரித்துள்ளன



வடமாகாணத்தில் உள்ள தமிழர்களின் பூர்வீக நிலங்களில் 70 சதவீதத்தை அரச திணைக்களங்கள் அபகரித்து வைத்துள்ளதாக தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், அபகரிக்கப்பட்டுள்ள இந்நிலங்களை மாற்று இனத்தவர்களுக்கு வழங்கப்படுவதாகவும், இது தொடர்பில் ஜனாதிபதி நேரடியாகத் தலையீடுகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (24) நடைபெற்ற தாவர, விலங்கினப் பாதுகாப்புத் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், மஹாவலி அபிவிருத்தி அதிகாரசபை, வன இலாகா திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகிய நான்கு திணைக்களங்களும், வடக்குக் கிழக்கு தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை அபகரித்து அவற்றை மாற்று இனத்தவர்களுக்கு வழங்கி வருவதற்கு எதிராக , 12 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டதில் ஈடுபட்டனர் என்றார்.

இதன்போது கோரிக்கை கடிதம் ஒன்றையும் சமர்ப்பிக்க தயாராகியிருந்தோம். எனினும் ஜனாதிபதியோ அல்லது பொறுப்புவாய்ந்த அமைச்சரவை அமைச்சர்களோ எங்களது கோரிக்கைக் கடிதத்தை பெற்றுக்கொள்ள முன்வரவில்லை எனவும் கூறினார்.

வட மாகாணத்தில் உள்ள தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களில் 44 சதவீதத்தை வன இலாக்க திணைக்களம் அபகரித்து வைத்துள்ளது. இந்த திணைக்களமே வடக்கில் அதிகளவான காணிகளை அபரித்துள்ளது. வடமாகாணத்தில் 888,400 ஹெக்டேயர் நிலப்பரப்பு உள்ளது. இதில் 392,164.6 ஹெக்டயர் நிலங்களை வன இலாக்க திணைக்களம் அபகரித்து வைத்துள்ளது எனவும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 7091.6 ஹெக்டெயர் நிலப்பகுதிகளை மீண்டும் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாக்க வர்த்தமானி அறிவித்தலை விடுக்க வேண்டுமென முன்மொழியப்பட்டுள்ளது. வடமாகாணத்தின் 70 சதவீதமான நிலங்களை இந்தத் திணைக்களங்கள் அபகரித்து வைத்துள்ளன. எஞ்சியுள்ள 30 சதவீத நிலங்களை மக்கள் பயன்படுத்துகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் தொடர்ந்து வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டு வடக்கு மாகாண நிலங்களை அபகரித்து வருவதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே இது தொடர்பில் ஜனாதிபதி உடனடியாகத் தலையீடுகளை மேற்கொண்டு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# வாழ்வதே ஆச்சரியம்



நாட்டில் அத்தியாவசிய பொருள்களுக்கு தட்டுப்பாடு காணப்படுகின்ற நிலையில், அதிகளவான நிதியை நெடுஞ்சாலைகளை அமைக்க ஒதுக்கீடு செய்ய வேண்டுமா என கேள்வி எழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா, தற்காலிகமாக நெடுஞ்சாலைகள் அமைப்பதை நிறுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (24) நடைபெற்ற தாவர, விலங்கினப் பாதுகாப்புத் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், நல்லாட்சி அரசாங்கத்தில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றிருந்தால், தற்போதைய அரசாங்கம் அதனை கண்டறிய வேண்டும். போலியாக குற்றச்சாட்டுக்களை சுமத்தாது ஊழல் நடைபெற்றிருந்தால் விசாரணைகளின் ஊடாக அதனை நிரூபிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை தற்போது நாட்டில் மின்சாரத் தடை ஏற்பட்டுள்ளது. மருந்துபொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சீமெந்து இல்லை. பால்மாவை எங்கும் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உள்ளது. இப்படியான நாட்டில் மக்கள் வாழ்கிறார்கள் என்பது ஆச்சரியத்துக்குரியது. இதற்காக அவர்களுக்கு பரிசீல்களை வழங்க வேண்டும். அமைச்சர்களின் வீடுகளுக்கு மின்சாரத் தடையில்லை. அவர்களின் வீடுகளில் ஜெனரேட்டர்கள் உள்ளன எனவும் தெரிவித்தார்.

நாட்டில் இவ்வாறானப் பரிச்சினை இருக்கும் நிலையில் அரசாங்கம் நெடுஞ்சாலைகளுக்கு பாரியளவிலான நிதியை ஒதுக்கி வருகிறது. இதனைத் தற்காலிகமாகவேனும் நிறுத்தி வைக்க வேண்டும்.

அரசாங்கத்துக்கு இதயம் என்று ஒன்று இருந்தால் உயர்தரப் பரீட்சை நடைபெறும்போது மின்சாரத்தை துண்டிக்குமா? இதயத்தைத் தொட்டு சொல்லுங்கள் இந்நேரத்தில் அதிவேக நெடுஞ்சாலைகள் அவசியமா? என சொல்லுங்கள் எனவும் அவர் இதன்போது கூறினார்.

அரசாங்கத்தின் சலுகைகளுக்காகவா

# வாயை மூடியுள்ளீர்கள்

**வேலுகுமார் கேள்வி**



தொழிலாளர்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு சபைக்கு வந்த சில பாராளுமன்ற உறுப்பினர்கள், தொழிலாளர்களின் பிரச்சினையை பேசாது வாயைமூடிக்கொண்டிருப்பது அரசாங்கம் அவர்களுக்கு வழங்கும் சலுகைகளுக்காகவா? என கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (24) நடைபெற்ற தாவர, விலங்கினப் பாதுகாப்புத் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், நாட்டில் இருக்கக்கூடிய மக்கள் தங்களை எவ்வாறு பாதுகாத்துக்கொள்வது என்கிற நிலையில் இருக்கும்போது தாவர, விலங்கினப் பாதுகாப்புத் (திருத்தச்) சட்டமூலம் தொடர்பில் பேசுகிறோம். மரங்களைக் கண்டாலேயே அரசாங்கம் வெட்டி விற்பனை செய்கிறது. கண்டி, நுவரெலியா, நாவலபிடி ஆகியப் பிரதேசங்களில் அரசாங்கம் பெருந்தோட்டத்துக்கு சொந்தமான தோட்டங்களில் மரங்களை தொடர்ந்து வெட்டி விற்பனை செய்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

தோட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 40 ரூபாய் விலை குறைவில் கோதுமை மாவை வழங்குகிறோம் ஆனாலும் எங்களை குறைகூறுகிறார்கள் என இராஜாங்க அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

மக்களுக்கு நிவாரணம் கொடுப்பதற்கு முன்னர் மக்களிடம் இருந்து பணம் அறிவிடப்பட்டுள்ளது. நாகஸ்தனை தோட்ட மக்களின் ஜனவரி மாத சம்பளத்தில் இருந்து கோதுமை மாவுக்கான பணம் அறிவிடப்பட்டுள்ளபோதிலும், இதுவரையில் அவர்களுக்கு கோதுமை மா கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

டொலரை தரும் மரமாக தேயிலை தொழில் இருக்கிறது. இந்த தொழிலை கட்டியெழுப்ப தொழிலாளர்களின் வருவாய் அதிகரிக்கப்பட வேண்டும். ஆயிரம் ரூபாய் சம்பளத்தை வழங்குவதாக உறுதியளித்துவிட்டு தற்போது 800 ரூபாயை வழங்க முடியும் என கூறுகிறார்கள். இது எந்தவகையில் நியாயம். தொழிலாளர்களின் வாக்குகளை வாங்கிக்கொண்டு பாராளுமன்றத்துக்கு வந்துள்ள சில எம்.பிகள் இது தொடர்பில் வாயை மூடிக்கொண்டு பேசாமல் இருக்கிறார்கள். அரசாங்கம் கொடுக்கும் சலுகைகளுக்காகவா வாயை மூடிக்கொண்டிருக்கிறீர்கள் எனவும் வேலுகுமார் இதன்போது கேள்வி எழுப்பினார்.

# பாகிஸ்தானில் கபீர் ஒழிந்திருந்தார்



அதிவேக நெடுஞ்சாலைகள் அமைச்சுப் பதிவு வழங்கப்படவில்லை என்பதால் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம், பாகிஸ்தான் சென்று ஒழிந்திருந்தாரென தெரிவித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, கபீருக்கு இது நினைவில்லை என்றால் அவரின் கடவுச்சீட்டைப் பார்க்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (24) நடைபெற்ற தாவர, விலங்கினப் பாதுகாப்புத் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை கபீர் ஹசீமே பகிர்ந்தளித்தார் என்றார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் எந்தவோர் அமைச்சுக்களிலும் ஊழல், மோசடிகள் இடம்பெறாது என தான் உறுதியளிப்பதாகவும், மத்திய வங்கியில் கொள்ளையிட்டு டி.எஸ். சேனாநாயக்க உருவாக்கிய ஐக்கிய தேசிய கட்சியையே இல்லாதொழித்துவிட்டனர் என்றார்.

எரிபொருள் பிரச்சினை

# இ.போ.ச பஸ் சேவையைப் பாதிக்காது



பொதுப் போக்குவரத்தின் தொடர்ச்சியையும் ஒழுங்கையும் பேணுவதற்காக இலங்கை போக்குவரத்து சபை பஸ்களுக்கு தேவையான எரிபொருளை வழங்க அரசாங்கம் தலையிட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, முன்னதாக கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த எரிபொருளை பெற்றுக்கொள்வது தொடர்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடியுள்ளதாக அந்த சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபையிடம் போதியளவில் எரிபொருள் தற்போது கையிருப்பு உள்ளது என பிரதிப் பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹன்ச தெரிவித்துள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு நிலையிலும், பஸ் பயணிகளுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் பொது போக்குவரத்து சேவை தொடர்ந்தும் வழங்கப்படும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

புதிய கட்சிகள் பதிவுக்கான

# கால அவகாசம் நிறைவு




புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் நேற்று (24) நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்ததாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து விண்ணப்பங்களும் தேர்தல்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் விசேட குழுவினூடாக பரிசீலிக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

அத்துடன், தகமைகளை பூரணப்படுத்தும் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள அரசியல் கட்சிகளை விசேட மாநாட்டில் ஆய்வுக்குட்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கை கடந்த ஜனவரி மாதம் 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், நாட்டில் இதுவரை 79 அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்



**“ போதைப் பொருள் பாவனை ஒழிப்பும் அதனால் ஏற்படக்கூடிய பாதகங்கள் பற்றிய தெளிவின் அவசியமும் பற்றிய உரை நிகழ்த்தப்பட்டது என சங்கத்தின் செயலாளர் எஸ்.ஏ.எம். ரில்வான் தெரிவித்தார்**

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, கஹட்டக ஸ்திகிலிய, அ/ ஈத்தல்வெ டுனுவெவ முஸ்லிம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்வொன்று பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி பாடசாலை வளாகத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கென பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வில், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் அனுசரணையுடன் உத்தியோகபூர்வ வளவாளரான B.M. ரஷாட்டால், போதைப் பொருள் பாவனை ஒழிப்பும் அதனால் ஏற்படக்கூடிய பாதகங்கள் பற்றிய தெளிவின் அவசியமும் பற்றிய உரை நிகழ்த்தப்பட்டது என சங்கத்தின் செயலாளர் எஸ்.ஏ.எம். ரில்வான் தெரிவித்தார்.

மின்சாரத் தடை பரீட்சைப் பெறுபேறுகளில்

# பாதிப்பை ஏற்படுத்தும்

ஏ.எச்.ஏ. ஹுஸைன்



தற்போது அமலப்படுத்தப்படும் மின்சாரத் தடை, உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளில் பாதிப்பை ஏற்படுத்தும் என ஏறாவூர் நகர சபைத் தவிசாளர் எம்.எஸ். நழிம் தெரிவித்தார்.

அச்சபையின் 47ஆவது மாதாந்த அமர்வு, நகர சபைக் கேட்போர் கூடத்தில் நேற்று (24) நடைபெற்றது.

நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய அவர், தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது: "தற்போதைய மின்சாரத் தடை காரணமாக, மாணவர்களின் கல்வி முற்று முழுவதுமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இரவு 6 மணி தொடக்கம் 10 மணி வரை மாணவர்கள் மீட்டல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நேரங்களைக் குறி வைத்து மின்சாரம் தடை செய்யப்படுகின்றது. இது அவர்களது பரீட்சைப் பெறுபேறுகளில் கணிசமான அளவு பின்னடைவை ஏற்படுத்தும். அது போதாக்குறைக்கு பகல் வேளையிலும் மின்வெட்டு.

"இதனிடையே, மின்வெட்டை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் சமூக விரோதிகள், திருட்டுச் செயல்களிலும் இன்னோரன்ன சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபடுகின்றார்கள். இருட்டு வேளையில் போதைப் பொருள் விற்பனையாளர்கள் சுதந்திரமாக உலாவுகின்றார்கள். துஷ்பிரயோகமும் இடம்பெறுகின்றது.

"நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பின்னடைவு காரணமாக, நகர சபையின் வருமானம், மக்களின் வாழ்வாதாரம், தொழிற்றுறைகள், கேள்விக்குறியாக்கப்பட்டு உள்ளதோடு, அனைத்துமே முடக்கப்பட்டுள்ளன.

"சொல்லப்போனால் மக்கள் வாழ்வதற்கே வழியில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். பாரிய தொழிற்சாலைகள் தொடங்கி அடி மட்டத் தொழிலாளி வரை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஒவ்வொருவரின் வீட்டிலும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சி துல்லியமாகப் பிரதிபலிக்கின்றது" என்றார்.

மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வு பணிகளைப் பார்வையிட

# சந்தர்ப்பம் வேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கோரிக்கை

எஸ்.றொசேரியன் லெம்பேட்



மன்னார் மனிதப் புதைகுழி மீண்டும் அகழ்வு செய்யும் போது, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அதனை நேரடியாக பார்வையிட்டு உண்மைகளை கண்டறிய அனுமதிக்க வேண்டுமென மன்னாரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்க செயலாளர் பி.ஷர்மிளா கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் நேற்று (24) காலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "மன்னார் மாவட்டத்தில் கடந்த சில வருடங்களுக்கு முன்னர், மன்னார் நுழைவாயிலில் சதொச கட்டடம் இருந்த இடத்தை தோண்டிய போது மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டன.

"மன்னார் தீவுப் பகுதியில் 1990ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரை எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில், வீடுகளுக்கு வந்து இராணுவத்தினர் எமது உறவுகளை பிடித்துச் சென்றுள்ளனர்.

"இதனால் குறித்த பகுதியில் மீட்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள், எமது உறவுகள் உடையதாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து இருந்தோம்.

"ஆனால், எமக்காக வாதாட வந்த சட்டத்தரணிகளை மன்னார் நீதவான் நீதிமன்றத்தில், எமக்காக ஆஜராக கூடாது என்று தடுத்து நிறுத்தினார்கள். இதனால் இவ்வழக்கை வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தோம். அதனடிப்படையில், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியனால் எமக்கு நல்லதொரு தீர்ப்பு வழங்கப்பட்டது.

"நாங்கள் கேட்டுக் கொள்வது எமக்கான உண்மை தன்மை, நீதி என்பன எங்களுக்கு கிடைக்க வேண்டும். இந்த மனித எச்சங்கள் யாருடையவை என்பதைத் தெரியப்படுத்த வேண்டும். அத்தோடு, அகழ்வு பணியின் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாங்கள், அங்கு சென்று அதனை நேரடியாகப் பார்வையிட்டு கண்டறிவதற்கான சுதந்திரத்தை எங்களுக்குத் தர வேண்டும்.

"அத்துடன், எதிர்வரும் மாதத்தில் நடைபெற இருக்கின்ற ஜெனீவா கூட்டத்தொடரில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக உண்மை மற்றும் நம்பிக்கை தன்மையுடன் கூடிய சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

"ஏனெனில், இங்கே நீதிக்காகவும், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்காகவும் போராடிய தாய், தந்தையர் 100க்கும் மேற்பட்டவர்கள் இறந்து விட்டார்கள்" என்றார்.

கிழக்கு வீதி அபிவிருத்தி அமைச்சின்

# கணக்காளராக தஸ்தீக்

அஸ்லம் எஸ். மௌலானா, சகா



கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, காணி, காணி அபிவிருத்தி, திறன், மனித வள அபிவிருத்தி, மகளிர் விவகார, நீர் வழங்கல் அமைச்சின் பிரதம கணக்காளராக நியமிக்கப்பட்டுள்ள அப்துல் ஹமீட் தஸ்தீக், நேற்று (24) தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

திருகோணமலையில் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்தில் அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார் முன்னிலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அதிகாரிகள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

மருதமுனையை சேர்ந்த இவர், கடந்த ஆறு வருடங்களாக கல்முனை மாநகர சபையின் கணக்காளராக கடமையாற்றி வந்த நிலையில், இப்புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு இலங்கை கணக்காளர் சேவையில் இணைந்து கொண்ட இவர், பல அரச நிறுவனங்களில் கணக்காளராக சேவையாற்றி, சுமார் 14 வருட அனுபவங்களை கொண்டிருக்கிறார்.

2019ஆம் ஆண்டு தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் வர்த்தக நிர்வாகத்துறையில் முதுமாணிப் பட்டத்தை பெற்றுக் கொண்டதையடுத்து, கணக்காளர் சேவை தரம் ஒன்றுக்கு இவர் நியமிக்கப்பட்டதுடன், பிரதம கணக்காளர் பதவிக்கு தகுதி பெற்றிருந்தார்.

ஐஸ் போதைப்பொருளுடன்

# அதிகாலையில் கைதாகிய மூவர்

ரீ.எல்.ஜவ்பர்கான்

வறக்காபொலயில் இருந்து மட்டக்களப்புக்கு கடத்தி வரப்பட்ட ஐஸ் போதைப்பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

நேற்று (24) அதிகாலை 01 மணியளவில் கிடைக்கப்பெற்ற தகவலொன்றை அடுத்து பார்வீதியில் வைத்து சுமார் 45 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான நபர்கள், கடத்தலுக்குப் பயன்படுத்திய டிமோ பட்டா வாகனம் மற்றும் அலைபேசிகள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

பசுமையான நகரத் திட்டத்தின் கீழ்

# மன்னார் நகரில் ஐந்து குப்பைத் தொட்டிகள்



எஸ்.றொசேரியன் லெம்பேட்

பசுமையான நகரத் திட்டத்தின் கீழ், மன்னார் நகரை அழகுபடுத்தும் வேலைத்திட்டத்தின் முதல் கட்டமாக, மன்னார் நகரை சுத்தமாக வைத்திருக்கும் நோக்கத்துடன், கழிவுப் பொருட்களை தரம் பிரித்து சேகரிக்கும் குப்பைத் தொட்டிகள் மன்னார் நகரப் பகுதிகளில் வைக்கப்பட்டன.

மன்னார் நகர சபைக்கு உட்பட்ட பொது இடங்களில் கழிவு பொருட்களை தரம் பிரித்து சேகரிக்கும் வகையில், மன்னார் நகர சபையால் குறித்த குப்பைத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆரம்ப நிகழ்வு, மன்னார் நகர சபையின் தவிசாளர் ஞா.அன்ரனி டேவிட்சன் தலைமையில் நேற்று (24) காலை நடைபெற்றது.

# யாழில் பெண் கொலை; சந்தேகநபர் கைது

எம்.றொசாந்த், எஸ்.நிதர்ஷன்

யாழ்ப்பாணம், சோமசுந்தரம் அவனியூ பகுதியில் வீடொன்றில் வயோதிப பெண்ணொருவர் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

செவ்வாய்கிழமை 22ஆம் திகதி மதியம் இடம்பெற்ற இந்தக் கொலைச் சம்பவத்தில், அப்பகுதியை சேர்ந்த மரியநாயகம் காணிக்கையம்மா ஜெயசீலி (வயது 72) எனும் பெண்ணே அடித்துக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

அப்பெண் தனிமையில் இருந்த வேளை, வீட்டு வேலைக்கு வந்த இளைஞனே பெண்ணை பூச்சாடியால் அடித்துக் கொலை செய்த பின்னர், பெண் அணிந்திருந்த தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளார் என ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில், கொலை நடந்த வீட்டுக்கு அருகில் இருந்த சி.சி.டி.வி கமெரா காட்சிகளின் அடிப்படையில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

காணொளியில் சந்தேகநபர் ஓட்டோவில் தப்பிச் செல்லும் காட்சியின் அடிப்படையில் விசாரணைகளை துரிதப்படுத்தி இருந்த பொலிஸார், யாழ்ப்பாணம், முலவை எனும் பகுதியில் வைத்து சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை, யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து தீவிர விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சாரணர்களுக்கான ஜனாதிபதி விருது



ஏ.எச்.ஏ. ஹுஸைன், ஜவ்பர்கான்



சாரணர்களுக்கான ஜனாதிபதி விருது மற்றும் சின்னஞ்சூட்டும் நிகழ்வு, ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் (23) நடைபெற்றது.

கொவிட் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு, ஜனாதிபதி விருதைப் பெறத் தகுதியுடைய நாடு பூராகவும் உள்ள அனைத்து சாரணர்களையும் ஒரே இடத்துக்கு அழைக்க முடியாத காரணத்தால், குறித்த நிகழ்வானது நிகழ்நிலை (Zoom) தொழில்நுட்பத்தின் ஊடாக அனைத்து சாரணர்களையும் ஒருமித்து நடைபெற்றிருந்தது.

இதன்போது கிழக்கு மாகாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட 44 சாரணர்களுக்கான ஜனாதிபதி விருது மற்றும் சின்னஞ்சூட்டும் நிகழ்வு, மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

சொகுசு காரில்

# கஞ்சா கடத்திய இருவர் கைது



பாறுக் ஷிஹான்

அம்பாறை, கல்முனை பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பெரிய நீலாவணை பகுதியில், அதி சொகுசு காரில் கேரளா கஞ்சாவை கடத்திய இருவரை, நேற்று முன்தினம் (23) கல்முனை பொலிஸார் கைது செய்தனர்.

நீண்ட காலமாக கேரளா கஞ்சா வாகனங்களின் மூலம் கடத்தப்பட்டு விற்பனை செய்து வருவதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய, கல்முனை பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து பெரியநீலாவணை பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பு காவலரணில் பாதுகாப்பை பலப்படுத்தி இருந்தனர்.

இந்நிலையில், பொலனறுவை பகுதியில் இருந்து பொத்துவில் நோக்கி ஹொன்டா ரக அதி சொகுசு காரில் 10 கிலோ கிராமுக்கும் அதிகமான கஞ்சா பொதிகளுடன் பயணம் செய்த இரு சந்தேகநபர்களே கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 3 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான பணம், 4 அலைபேசி உள்ளிட்ட சான்றுப் பொருள்களைக் கைப்பற்றியுள்ளனர்.

மேலும், இவ்வாறு கைதாகிய 27, 28 வயதுடைய சந்தேக நபர்கள் உட்பட மீட்கப்பட்ட சான்று பொருட்கள் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து செல்லப்பட்டு மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



வீடொன்றின் குளியல் அறையில்

# ஐந்து அரிய வகை கடலாமைகள் மீட்பு

எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் கடலில் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்டு, மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுத்தூர் பகுதியில் உள்ள வீடொன்றின் குளியல் அறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 கடலாமைகள், நேற்று முன்தினம் (23) இரவு மன்னார் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் துல்ஸன் நாகவத்தயின் பணிப்புரையின் கீழ், உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரபாத் விதானக்கவின் கண்காணிப்பில், மாவட்ட குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி குமார பல்லேவெல தலைமையிலான குழுவினர், எழுத்தூர் பகுதியில் உள்ள குறித்த வீட்டில் சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது வீட்டின் குளியல் அறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், அரிய வகை பேராமை இனத்தைச் சேர்ந்த கடல் ஆமைகள் 05 மீட்கப்பட்டன. எனினும், அவ்வீட்டில் சந்தேகநபர்கள் எவரும் இருக்கவில்லை.

மீட்கப்பட்ட ஆமைகள் ஒவ்வொன்றும் சுமார் 100 கிலோ கிராம் எடை கொண்டவை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரின் மேலதிக சட்ட நடவடிக்கைகளின் பின்னர் கடலாமைகளை கடலில் விடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் குறித்து மன்னார் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

காரைநகர் கடற்பரப்பில்

# இந்திய மீனவர்கள் 22 பேர் கைதாகினர்



எஸ்.நிதர்ஷன்

காரைக்கால், நாகை மாவட்டத்தைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் 22 பேர் இலங்கை கடற்படையினரால் நேற்று முன்தினம் (23) இரவு கைது செய்யப்பட்டனர்.

காரைநகரை அண்டிய கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டு ரோலர்களில் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 22 இந்திய மீனவர்களே கைது செய்யப்பட்டு, மயிலிட்டி துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டனர்.

இவர்கள் தொழிலில் ஈடுபட்ட படகுகள், கடற்படையால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், படகிலிருந்த மீனவர்களுக்கு கொரோனா தொற்று தொடர்பிலும் மலேரியா தொற்றுத் தொடர்பிலும் சுகாதாரத் துறையினரால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த 22 பேரையும் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

சட்டவிரோதமாக

# மான் வளர்த்தவருக்கு விளக்கமறியல்

கனகராசா சரவணன், பைஷல் இஸ்மாயில்



மட்டக்களப்பு, கரடியானாறு பொலிஸ் பிரிவிலுள்ள பங்குடாவெளி பிரதேசத்திலுள்ள வீடொன்றில் அனுமதியின்றி மான் வளர்த்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஒருவரை, மார்ச் மாதம் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார். இராணுவப் புலனாய்வுக் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய, பங்குடா வெளி பிரதேசத்திலுள்ள குறித்த வீட்டை, கரடியனாறு பொலிஸாருடன் வன விலங்கு அதிகாரிகள் முற்றுகையிட்டனர்.

நீதிமன்றம் செல்ல முன்வந்த

# இளம் சட்டத்தரணியே நல்லிணக்கத்தின் தூதுவர்

## நுவரெலியா பிரதேச செயலக விவகாரம்

நுவரெலியா பிரதேச செயலக அதிகரிப்பு விடயத்தில் காட்டப்படும் பாரபட்சத்துக்கு எதிராக நீதிமன்றத்தை நாடுதல் என்ற நிலையில், இதுவரை எந்தவொரு தமிழ்ச் சட்டத்தரணியும் எங்களைத் தொடர்பு கொள்ளவோ அல்லது தாங்களாக வழக்குத் தொடரவோ முன்வரவில்லை என தெரிவித்துள்ள முன்னாள் நுவரெலிய மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான மயில்வாகனம் திலகராஜா, ஆனால் இளம் சட்டத்தரணியான ருடானி ஷாஹிர், தானாக முன்வந்து குறிப்பிட்ட விடயத்துக்காக வழக்கில் ஆஜராக தயார் என தெரிவித்துள்ளார்.

‘சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கம், சாத்தியப்பாட்டுக்கான வழிமுறைகள்’ எனும் தலைப்பில் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமிய அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைமையகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பேச்சாளராக கலந்துகொண்ட போதே,



மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், சமூகங்களுக்கு இடையேயான நல்லிணக்கம் என்பது, ஒரு சமூகம் மற்றைய சமூகத்தைப் புரிந்து கொள்வதில்தான் தங்கி இருக்கிறது. மலையகச் சமூகத்தை பொறுத்தவரையில் அவர்கள், மற்ற சமூகங்களைப் புரிந்து கொண்ட அளவுக்கு, அவர்களை மற்றைய சமூகத்தினர் புரிந்து கொள்ளவில்லை என்பதே நிதர்சனமாகும்.

நுவரெலியா பிரதேச செயலக அதிகரிப்பு விடயத்தில் காட்டப்படும் பாரபட்சத்துக்கு எதிராக, நீதிமன்றத்தை நாடுதல் என்ற நிலையில் இளம் சட்டத்தணியான ருடானி ஷாஹிர் தானாக முன்வந்துள்ள நிலையில், ஒரு முஸ்லிம் எனப்பார்க்காது சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கத் தூதுவராகப் பார்க்கிறேன். இத்தகையவர்களால் மட்டுமே நல்லிணக்கச் சாத்தியப்பாட்டுக்கான வழிமுறைகளைக் கண்டறிய முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

# பொகவந்தலாவையில் நடமாடும் சேவை



ரஞ்சித் ராஜபக்‌ஷ

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, கினிகத்தேனை பிரதேச செயலாளர் ருவனி சிதாரா கமகே தலைமையில், நேற்று (24) நடமாடும் சேவையொன்று முன்னெடுக்கப்பட்டது.

பொகவந்தலாவை, ஹொலிரோசரி தமிழ் வித்தியாலயத்தில் இந்த நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட்டது.

இந்த நடமாடும் சேவை மூலம் குறித்த பிரதேசத்தில் அடையாள அட்டை இல்லாத முதியவர்களுக்கு அடையாள அட்டையை விநியோகித்தல், பிறப்பு, இறப்பு சான்றிதழை வழங்குதல் உள்ளிட்ட பல சேவைகள் இதன்மூலம் பெற்றுக்கொடுக்கப்பட்டன.



# கண்டி உறுப்பினர்கள் கறுப்பு பட்டியணித்து போராட்டம்

ஷேன் செனவிரத்ன

கண்டி மாநகர சபையில் நேற்று (24) நடைபெற்ற விசேட கூட்டம், கோரமின்மையால் நிறுத்தப்பட்டது.

கண்டி மாநகர சபையைச் சேர்ந்த ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சில, விசேட காரணங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு விசேட கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுக்குமாறு மேயரிடம் எழுத்துமூலமாக கோரிக்கை விடுத்திருந்தனர். அதனடிப்படையில், மேயர் கேசர சேனாநாயக்கவினால், கூட்டத்துக்கு நேற்று (24) அழைக்கப்பட்டது.

எனினும், மேயர் உட்பட, ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 10 பேர் மட்டுமே சபையில் இருந்தனர். சபையை கொண்டு நடத்துவதற்கு கோரம் இன்மையில், விசேட கூட்டம் இரத்துச் செய்யப்பட்டது. எனினும், விசேட கூட்டத்தை கூட்டுமாறு கோரி, உறுப்பினர்கள சிலர், கறுப்புப் பட்டியை அணிந்தவாறு சபைக்கு வெளியே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஹெரோய்ன் விற்ற

# பெண் கைது

மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடமிருந்து ஹெரோய்ன் போதைப்பொருளை வாங்குவதற்காக வந்த நான்கு இளைஞர்களும் குறித்த பெண்ணும் நேற்றுமுன்தினம் (23) கைது செய்யப்பட்டனர் என மாத்தளை பிரதேச ஊழல், ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபரிடம் இருந்து 7,920 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபரின் வீட்டுக்கு போதைப்பொருள் வாங்க வந்த இளைஞர்கள் அல்வத்தை, பண்டாரபொல, முவன்தெனிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் சந்தேக நபர்கள் மாத்தளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.





## கௌரவிப்பு

கார்பெக்ஸ் கல்லூரியில் கல்வி பயின்ற 1994ஆம் ஆண்டு மாணவர்களால் நடத்தபட்ட கௌரவிப்பு நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் அதிபர் பரசுராமன் சங்கர் தலைமையில் நடைபெற்றது. இதன்போது, முன்னாள் அதிபர் எஸ். அண்ணாசாமி, ஆசிரியை திருமதி மகேஸ்வரி ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். (எம். கிருஸ்ணா)

# அரசாங்கம் புறக்கணிக்கிறது

தொழிலாளர்களின் உரிமை சார்ந்த விடயங்களை

## உபதவிசாளர் பிரதீபன் குற்றச்சாட்டு

எம்.பிரபா




தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்கிவிட்டோம் என்ற பெயரைப் போட்டுக்கொள்ளும் இந்த அரசாங்கம், முற்று முழுதாக இந்த மக்களின் உரிமை சார்ந்த விடயங்களை புறக்கணித்துள்ளதாக ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளரும் மஸ்கெலியா பிரதேச சபையின் உப தவிசாளருமான பெரிசாமி பிரதீபன் தெரிவித்தார்.

ஹட்டனில் அமைந்துள்ள ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் (23) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

தொழிலாளர்களுக்கு சம்பளம் அதிகரித்ததாக காட்டி, அவர்கள் கடந்த காலங்களில் பெற்ற 750 ரூபாய் சம்பளத்தையேனும் தற்போது நாளொன்றுக்கு பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு அரசாங்கம், தொழிலாளர்களை தள்ளிவிட்டுள்ளது.

பெருந்தோட்ட மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதுடன் சலுகைகளும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளன. கூட்டு உடன்படிக்கை தகர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் இந்த அரசாங்கம் மலையக மக்களை நசுக்குகின்றது.

அத்துடன் பொருளாதார ரீதியாக மலையக மக்களுக்கு பாரியளவிலான சுமைகளை இந்த அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளமை வெளிப்படையாக தெரிகின்றது. இவ்வாறான நிலையில் சில நாள்களில் நீதிமன்றில் விசாரணைக்கு வரும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள பிரச்சினை வழக்கை காட்டி, காலத்தை இழுந்தடிப்பு செய்த வேலையையே அரசாங்கம் செய்து வந்துள்ளது. எனவே, இன்று பெருந்தோட்ட மக்களின் சம்பள அதிகரிப்பு குறித்து பல்வேறு பிரச்சினைகள் தற்போது ஏற்பட்டுள்ளன. பொருளாதார சுமையால் பாரியளவில் பெருந்தோட்ட மக்கள் நசுக்கப்படுகின்றார்கள். இவ்வாறான நிலையில் சம்பள விடயத்தில் இழுத்தடிப்புகளை செய்யாது இந்த மக்களுக்கான 1,000 ரூபாய் சம்பளத்தை நியாயமாக பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.



ஆசிரியரின் உயிரிழப்புக்கு காரணமானவர்களுக்கு

# எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## இராஜாங்க அமைச்சர் ஜீவன் உறுதி

பி.கேதீஸ், எஸ். கணேசன்

தலவாக்கலை பகுதியில் 200 வருடம் பழைமை வாய்ந்த ஆலமரத்தை, முறையற்ற விதத்தில் வெட்டி, ஒருவரின் உயிரிழப்புக்கு காரணமான நபர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென தோட்ட உட்கட்டமைப்பு சமுதாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தலவாக்கலை- லிந்துலை நகர சபை மண்டபத்தில் அவசர கூட்டமொன்று, ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று முன்தினம் (23) இடம்பெற்றது.

இது தொடர்பாக ஜீவன் தொண்டமான் தெரிவிக்கையில்,

இது போன்ற சம்பவங்கள் இனியும் நடைபெறா வண்ணமும், இச்சம்பவம் குறித்து உடனடியாக விரிவான அறிக்கையொன்றினை சமர்ப்பிக்குமாறும் பணித்துள்ளேன்.

அத்துடன், ஆசிரியரின் மரணத்துக்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தகுந்த தண்டனையை பெற்றுக்கொடுக்க துரித கதியில் நடவடிக்கைகளை எடுக்குமாறும் பணித்துள்ளேன்.

உயிரிழந்த ஆசிரியர் வேலுசாமி மகேஸ்வரன் இப்பகுதியில் ஒரு பிரசித்தி பெற்ற ஆசிரியர். ஆசிரியரின் அகால மரணம் எம்மை துயரத்துக்குள்ளாக்கியது மட்டுமல்லாமல் மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவரின் குடும்பத்தாருக்கு நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

இதுபோன்ற அபாயகரமான சம்பவங்கள் மலையகத்தில் இனி ஒரு போதும் நிகழாத வண்ணம் இதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள போவதாகவும் அவரின் இழப்பு முழு சமூகத்திற்குமான இழப்பாகும். வீதியில் ஒரு பாதுகாப்பும் இல்லாமல் மரத்தை வெட்டியது பாரிய குற்றமாகும். இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளேன் என்றார்.

நீண்ட நாள் பகையால் மோட்டார் சைக்கிளை

# தீவைத்து எரித்தவருக்கு விளக்கமறியல்

இந்திக அருணகுமார

நாவுல, ஹப்புகஸ்யாய வீடமைப்புத் திட்டப்பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றை தீவைத்து எரித்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட நபர், இந்த மாதம் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நாவுல பிரதான நீதவான் ஆர். டி. ஜானக முன்னிலையில் நேற்றுமுன்தினம் (23) ஆஜர்படுத்தப்பட்ட போதே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீடமைப்புத் திட்டத்தைச் சேர்ந்த 28 வயதான நபரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.



இந்த மாதம் 22ஆம் திகதி மாலை சுசுகி ரக மோட்டார் சைக்கிள் ஒன்று சந்தேகநபரால் தீவைத்து எரிக்கப்பட்டதாக கிடைத்த தகவலுக்கமையவே, சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நபரொருவருடன் ஏற்பட்ட நீண்ட நாள் பகையே, குறித்த சம்பவத்துக்கு காரணம் என தெரியவந்துள்ளது.

பெருந்தோட்டப்பகுதிகளிலுள்ள சமூக அமைப்புகளை

# பதிவு செய்ய ஏகமனதாக இணக்கம்

எம். செல்வராஜா

பெருந்தோட்டங்களில் சமூக அமைப்புகளை பதிவு செய்வதற்கு பதுளை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் விடுத்த கோரிக்கைக்கமையவே, இணக்கம் காணப்பட்டுள்ளது.

கிராமிய அமைப்புகளிடம் வேலைத்திட்டங்கள் ஒப்படைக்கும் போது, வேலைத்திட்டங்களை தரக்குறைவாக நிறைவு செய்து விட்டு, ஒப்பந்த பணத்தை முழுமையாகப் பெற்றுக்கொள்வர். சமூக அமைப்பு பதிவு விண்ணப்பங்களை ஏற்று, அவற்றினை பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்கின்றேன் என அரவிந்தகுமார் எம்.பி கோரியுள்ளார்.

# தமிழர்களின் பூர்வீகத்தை அபகரிப்பதை கைவிடவேண்டும்

சிறுபான்மை இனங்களை சீண்டிப் பார்த்து, பெரும்பான்மை இனத்தவர்களில் ஒருசிலரின் மனங்களை சந்தோஷப்படுத்திக்கொண்டிருக்கும் இந்த அரசாங்கத்தால், சிறுபான்மையின மக்களுக்கு எவ்வகையிலும் நியாயம் கிடைக்காது என்பது அவ்வப்போது உறுதிப்படுத்தப்படுகின்றது.

யுத்தத்துக்குப் பின்னர், காணி சுவீகரிப்பு, மத அடையாளங்களை அழித்தல், தமிழ், முஸ்லிம்களின் தனிச் சட்டங்களில் கைவைத்தல் போன்றவை, மிகவும் சூட்சுமமான முறையில் முன்னெடுக்கப்படுகிறது.

அதற்குமேல் ஒருபடி சென்று, தொல்பொருள் அகழ்வாராய்ச்சி எனக்கூறிக்கொண்டு, அங்கு பௌத்த மத அடையாளங்கள் வைக்கப்படுகின்றன. வடக்கைப் பொறுத்தவரையில், வேப்பமரமும் அகற்றப்பட்டு அவ்விடத்தில் அரசமரம் நாட்டப்பட்ட அட்டூழியமும் அரங்கேறாமல் இல்லை. அவ்வளவுக்கு 'சிங்கள-பௌத்தம்' வலுக்கட்டாயமாக கால்லூன்ற வைக்கப்படுகின்றது.

பல்லினங்கள் வாழும் நாடொன்றில், இனங்களுக்கு இடையில் முரண்பாடுகள் ஏற்படும் வகையில் தூபமிடுவதைத் தவிர்க்கவேண்டும். தமது இருப்புக்காக, இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கக்கூடாது. அதேபோல, சிறுபான்மை இனங்களின் அடையாளங்களை அழிப்பதைக் கைவிடவேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் எல்லாமே, நல்லிணக்கத்துக்கு தீங்காகவே அமையும்.

வடக்கு, கிழக்கை பொறுத்தவரையில், தங்களுடைய உரிமைகளை வென்றெடுப்பதற்கான உரிமைப் போராட்டங்களும் உரிமைகளை பறிப்பதற்கு எடுக்கும் முயற்சிகளை தடுக்கும் வகையில், எதிர்ப்பு போராட்டங்களும் ஒவ்வொருநாளும் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன.

அதற்கு அப்பால் ஒருபடி மேற்சென்று, பாராளுமன்றத்தில் எதிரணியை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள், ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக, கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நேற்று (24) முன்னெடுத்திருந்தனர்.

'மகாவலி', 'வன பாதுகாப்பு' 'தொல்பொருள்', 'வனஜீவராசிகள்' எனும் போர்வையில் தமிழர்களின் நிலங்களை அபகரிப்பதை நிறுத்து என்று எழுதப்பட்ட பதாகைகளையும் ஏந்திநின்றனர். இவர்கள் ஜனாதிபதியை சந்திப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதும் அது கைகூடவில்லை.

எனினும், ஜனாதிபதி ஊடகப் பிரிவால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் வருகைக்கு எவ்வித முன்னறிவிப்பும் இல்லையென குறிப்பிட்டிருந்தது. எனினும், அந்த ஆர்ப்பாட்டத்தில், ஏனைய தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர் என்பது தொடர்பில், அவ்வறிக்கையில் ஒன்றுமே குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், ஆற்றப்படும் முக்கிய உரைகளில், தமிழ்த் தரப்பினருடன் பேசுவதற்குத் தயார் என்று கூறிவருகின்றார். ஆனால், தமிழ்த் தரப்பினருடனான சந்திப்பை, ஏதோவொரு வகையில் தவிர்த்து வருகின்றார். இது, வீட்டுக்கு விருந்தாளியை அழைத்துவிட்டு, கதவை மூடிவைப்பதற்கு ஒப்பானதாகும்.

நாட்டில் வாழும் சகல இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனாதிபதி என்பதை அவர், மறந்துவிடுகின்றார். இன்றேல், வேண்டுமென்றே தட்டிக்கழித்து வருகின்றனர். இவ்வாறான தட்டிக்கழிப்பின் ஊடாகவோ அல்லது தவிர்ப்பதன் ஊடாகவோ, பிரச்சினைகளை தீர்க்க முடியாது என்பதை கூறிக்கொள்கின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள் www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

ஸ்ரீ லங்கா முதல் சிங்கலே வரை – 08

# போராட்டமும் அரசியல் அவலமும்

மலையக மக்களுக்கு எதிரான விரோதம், 1970களின் நடுப்பகுதியில் முனைப்படைந்து, பல்வேறு வழிகளில் தனது கோரமுகத்தைக் காட்டத் தொடங்கியது. குறிப்பாக, தோட்டங்களில் இருந்து அவர்களை விரட்டும் நிகழ்ச்சி நிரல், புதிய கட்டத்தை அடைந்தது.

1977ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில், மீண்டும் தாம் வெற்றிபெறுவதற்கான திட்டத்தின் ஒருபகுதியாக, நுவரெலியா மாவட்டத்தில் சிங்களவர்களைக் குடியேற்றும் நடவடிக்கையாக, பிரதான வீதிகளின் ஓரங்களிலுள்ள தோட்டக்காணிகளில் 7,000 ஏக்கர் காணியை சுவீகரித்து, சிங்கள மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும் முயற்சியை அரசாங்கம் தொடங்கியது. மக்களிடமிருந்து இதற்குப் பலத்த எதிர்ப்புக் கிளம்பியது.

மக்களின் எதிர்ப்பையும் மீறி, அரசாங்கம் தனது நிகழ்ச்சிநிரலை முன்னெடுத்தது. 1977ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் திகதி, டெவன் பகுதியில் தோட்டக்காணியை அளந்து, ஒதுக்க வருகைதந்த அரசாங்க நில அளவையாளர்களுக்கும் அப்பகுதி தோட்டத்தொழிலாளர்களுக்கும் முரண்பாடு ஏற்பட்டது.

மக்களின் கருத்துகளுக்குச் செவிசாய்க்காது, காணிகளை அளக்க முயன்ற அளவையாளர்களை, தோட்டத் தொழிலாளர்கள் திருப்பி அனுப்பினர். இதைத் தொடர்ந்து, பொலிஸாருடன் அவ்விடத்துக்கு மீண்டும் வந்த அளவையாளர்களை எதிர்த்து, தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் மீது, பொலிஸார் நேரடியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் வட்டகொட, யொக்ஸ் போர்ட் தோட்டத்தை சேர்ந்த சிவணு லெட்சுமணன் என்ற இளைஞன் கொல்லப்பட்டார்.

இந்நிகழ்வு மலையகமெங்கும் பாரிய எழுச்சியை ஏற்படுத்தியது. பல இடங்களில் போராட்டங்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் தொடங்கின. இவ்வாறு, எதிர்ப்பில் ஈடுபட்டவர்களை பொலிஸார் ஒருபுறமும் காடையர்கள் மறுபுறமும் தாக்கினார்கள். மக்கள் போராட்டம் விரிவடைந்தது. ஆசிரியர்கள், மாணவர்கள், அரசாங்க ஊழியர்கள் எனப் பலதளங்களில் இருந்து ஆதரவு பெருகியது.

எதிர்ப்புகளின் ஒருபகுதியாக, சிவணு லட்சுமணன் கொல்லப்பட்டதை எதிர்த்து ஹட்டன், ஹைலண்ட்ஸ் கல்லூரி மாணவ, மாணவிகள் ஓர் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தினார்கள். ஹட்டன் நகரில், இந்த ஊர்வலத்தை இடைமறித்து, பொலிஸாரும் காடையர்களும் சேர்ந்து தாக்கினார்கள். இதில் மாணவர்களும் மாணவிகளும் ஆசிரியர்களும் தாக்கப்பட்டு, பலர் பலத்த காயமடைந்தனர். பல மாணவர்கள், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார்கள்.

இந்தப் போராட்டத்தை அடுத்து காணி சுவீகரிப்புத் திட்டம் அரசாங்கத்தால் கைவிடப்பட்டது. மலையக மக்களின் வரலாற்றில், இது மிகவும் முக்கியமான நிகழ்வாகும். இந்த நிகழ்வுகளை சௌமியமூர்த்தி தொண்டமான், தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

காணிச் சீர்திருத்தங்களால் பாதிக்கப்பட்டு, அரசியல் அதிகாரமின்றி இருந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இது வாய்ப்பானது, குறிப்பாக, நுவரெலியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் காமினி திஸாநாயக்கவுக்கு, தேர்தலில் இது மிகப்பெரிய வெற்றியைக் கொடுத்தது.

அரசாங்கத்தில் இணைந்து அமைச்சரானார் தொண்டமான். ஆனால், அவரால் மலையக மக்களுக்கு எதிரான காணிப் பங்கீடுகளையோ ஐ.தே.க அரசாங்கம் முன்னெடுத்த குடியேற்றத் திட்டங்களையோ நிறுத்தவோ தடுக்கவோ முடியவில்லை.

இதில் கவனிப்புக்குரியது யாதெனில், எந்த காமினி திஸாநாயக்கவோடு கூட்டுச்சேர்ந்து, சிவனு லெட்சுமணன் மரணத்தை வைத்து அரசியல் இலாபம் தேடினாரோ, அதே திஸாநாயக்கதான் மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்து, காணிகளைச் சிங்களவர்களுக்குக் கொடுப்பதிலும் மலையகத் தமிழர்களை நிலமற்றவர்களாக ஆக்குவதிலும் பிரதான பங்கு வகித்தார். இக்காலப் பகுதியில், மலையக மக்களைத் தொடர்ந்தும் நிலமற்றவர்களாகவும் வலுவற்றவர்களாகவும் ஆக்கும் திட்டங்கள் நடந்தேறின. உதாரணமாக, மூன்றை இங்கு குறிப்பிடலாம். அவற்றில்;

முதன்மையானது, கொத்மலை நீர்தேக்கத் திட்டம். இத்திட்டத்துக்காக 3,961 குடும்பங்கள் வலுக்கட்டாயமாக இடம்பெயர்க்கப்பட்டன. இவ்விடப்பெயர்வு சொல்லொனாத் துயரங்களை அவர்கள் வாழ்வில் ஏற்படுத்தியது.

இத்திட்டம் குறித்து, இன்றும் பெருமையாகப் பேசுபவர்கள் இருக்கிறார்கள். தேசியநலன் கருதி இடம்பெயர்க்கப்பட்ட மக்களுக்குப் பொருத்தமான, மேலும் பயனுள்ள வாழ்விடங்கள் வழங்கப்பட்டன. இது அரசாங்கத்தில் பங்காளியாக இருந்தமையாலேயே சாத்தியமானது என்று இ.தொ.க நீண்டகாலமாகச் சொல்லி வருகிறது.

கொத்மலைத் திட்டத்துக்கு நிதியுதவி அளித்த சுவீடனின் அபிவிருத்தி அமைச்சு, குறித்த திட்டம் தொடர்பில் இரண்டு மதிப்பீடுகளை நடாத்தியது. முதலாவது, 1990ஆம் ஆண்டு நடத்தப்பட்ட On evacuation of people in the Kotmale Hydro Power Project: Experience from a socio-economic impact study என்ற தலைப்பில் அமைந்த ஆய்வு. இரண்டாவது, 1992ஆம் ஆண்டு வெளியான A Flowed Success: An Evaluation of SIDA Support to Kotmale Hydropowe Project என்ற அறிக்கை. இவையிரண்டும், இந்த இடப்பெயர்வின் அவலங்களை முழுமையாக ஆவணப்படுத்துவதோடு இ.தொ.கா சொல்லிவந்த பொய்களை அம்பலப்படுத்துகிறது.

இரண்டாவது, 1988ஆம் ஆண்டு மலையகத்தில் 14,710 ஏக்கர் காணியை சிங்கள மக்களுக்குக் கொடுக்கும் அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அமைச்சர் காமினி திஸாநாயக்கவே அத்திட்டத்தை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து, அங்கிகாரம் பெற்றார். அமைச்சரவையில் இருந்த தொண்டமானால் எதுவும் செய்ய இயலவில்லை.

மூன்றாவது, 1988இல் மலையகத்தில் அரச காணிகளில் சட்ட விரோதமாக அத்துமீறிக் குடியேறி உள்ளவர்களுக்கு உறுதிகள் வழங்கப்பட்டன. கண்டியில் 3,000 ஏக்கரில் குடியேறியிருந்த 3,500 குடும்பங்களுக்கும் நுவரெலியாவில் 65 ஏக்கரில் குடியேறியிருந்த 150 குடும்பங்களுக்கும் பதுளையில் 200 ஏக்கரில் குடியேறியிருந்த 200 குடும்பங்களுக்கும் இரத்தினபுரியில் 1,500 ஏக்கரில் குடியேறியிருந்த 1,500 குடும்பங்களுக்கும் காணி உறுதிகள் வழங்கப்பட்டன.

இதேவேளை, மிகச்சொற்பமான அளவில் அத்துமீறிக் குடியேறியிருந்த மலையகத் தமிழர்களுக்கு உறுதிகள் வழங்கப்படவில்லை. மாறாக, அவர்கள் அக்காணிகளில் இருந்து அடித்து விரட்டப்பட்டார்கள். உதாரணமாக, 1987இல் போகாவத்தையில் குடியிருந்த தமிழர்கள் அனைவரும், பொலிஸாராலும் குண்டர்களாலும் அடித்து விரட்டப்பட்ட பின்னர், அந்நிலங்கள் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. இவையனைத்தையும் தனது அமைச்சுக் கதிரைக்காக, அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார் தொண்டமான்.

தாங்கள் தெரிவுசெய்து அனுப்பிய பிரதிநிதிகளால் ஆகப்போவது எதுவுமில்லை என்பதை உணர்ந்த மலையக மக்கள், தன்னெழுச்சியாகவே தங்களது உரிமைகளுக்காகப் போராடினார்கள். இதற்கும் மூன்று உதாரணங்களைக் காட்டவியலும்.


முதலாவது, பிரதான வீதிகளை அண்மித்த காணிகளை சிங்களவர்களுக்கு வழங்கும் காமினி திஸாநாயக்கவின் திட்டத்துக்கு மக்கள் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்தனர். நிலமற்ற தங்களுக்கு முதலில் காணிகள் வழங்கப்பட வேண்டும் என்று கோரினார்கள். இவ்வெதிர்ப்பால் இத்திட்டங்கள் பல செயற்படுத்தப்படவில்லை.

இரண்டாவது. நானுஓயா, தலவாக்கலஓயா ஆகிய ஆற்றங்கரைகளில் மலையக மக்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த விவசாய நடவடிக்கைகளைக் கைவிடும்படியும் அப்பகுதியை அரசாங்கம் கையகப்படுத்தப் போவதாகவும் அறிவிக்கப்பட்டது. இதையெதிர்த்து அம்மக்கள் தொடர்ச்சியாக வீரத்துடன் போராடி, தங்கள் விவசாயக் காணிகளை பாதுகாத்துக் கொண்டார்கள்.

மூன்றாவது, கொத்மலைத் திட்டத்தைப் போன்றே தலவாக்கலையில் ஒரு நீர்த்தேக்கத்தை அமைக்கும் திட்டம் பற்றிய செய்திகள் 1988இல் வெளியாகின. இத்திட்டத்தின்படி, மலையக மக்கள் விவசாயம் செய்யும் காணிகளும் தலவாக்கல நகரமும் இல்லாமல் போவதோடு மக்களும் மீள்குடியேற்றப்படுவார்கள் என்பதாக இருந்தது. இத்திட்டத்தை எதிர்த்து, மக்கள் போராடி இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த இயலாது செய்தார்கள்.

இவ்வாறு மலையக மக்களின் போராட்டங்கள் வெற்றியளித்தாலும் பரந்த தளத்தில் மலையக மக்களின் சவால்கள் அதிகரித்த வண்ணமே இருந்தன. இக்காலப் பகுதியில் மலையக மக்களின் வீட்டுரிமை, காணியுரிமை, வேலைவாய்ப்பு, நியாயமான சம்பளம், கல்வி என அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்ந்தும் அவர்களை இரண்டாந்தரப் பிரசைகளாகவே நிறுவியது.

அவர்களது அரசியல் பிரதிநிதித்துவம் சந்தர்ப்பவாதத்தில் சிக்கி சீரழிந்தது. மலையக மக்களைத் தேசிய இனமாக அங்கிகரிப்பது என்பது, இலங்கையின் ஏனைய இனங்களுக்கு உவப்பானதாக இருக்கவில்லை. சிங்களத் தேசியவாதமும் தமிழ்த் தேசியவாதமும் வெவ்வேறு காரணங்களுக்காக மலையக மக்களை தேசிய இனமாக அங்கிகரிக்கத் தயங்கின. இதை அடுத்தவாரம் பார்க்கலாம்.



## வாழ்வியல் தரிசனம்

எவர் எந்தத் தரத்தில் இருந்தாலும் அவர்கள் உயர்பதவி, அந்தஸ்து, செல்வம் என்பவற்றில் உயர்ந்து இருந்தாலும், 'தன்நிலை' உணராது விட்டால், அவர்கள் முழுமையானவர்களாக இருக்க முடியாது.

அதேபோல, நடுத்தர மக்களும் தங்களது வாழ்க்கை இதுதான் என, எதிர்கால நம்பிக்கை இழந்து, தாழ்வுமனப்பான்மையுடன் இருந்தால், அவர்களும் 'தன்நிலை' உணராதவர்களாகவே இருப்பார்கள்; உலக மாற்றம் புரியாதவர்களாக இருப்பார்கள்.

நான் யார்? நான் ஏன் பிறந்தேன் என்பவற்றை எவரும் முழுமையாகப் புரிந்துகொள்வது இல்லை. பேராசை உள்ளவர்களுக்கு உலக நிலையாமை புரிவதில்லை. ஆன்மிகம் பேசும் பலரும் அகவாழ்வை உணராமல், உலகியல் வாழ்வின் ஈர்ப்பில், தங்களை மறந்து வாழ்கின்றார்கள். தங்களுக்குள் ஆர்வம் மறைபொருளாக இருப்பதுபற்றி நோக்குவதுமில்லை.

முழுமை எதுவென உணர்வது சிரமமானது. ஆனால், இப்படியே வாழ முடியாது. தெளிவை நோக்கியே ஆகவேண்டும். உணர்க!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பாலியாற்று மண்ணரிப்பை தடுக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, மாந்தைகிழக்கு, பாலியாற்றில் இடம்பெறும் மண்ணரிப்பைத் தடுக்கும் வகையில், ஆற்றுக்கு குறுக்காக தடுப்புச் சுவர்களை அமைக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாந்தை கிழக்கு, வவுனிக்குளத்தின் கீழ் உள்ள பாலியாறு, முன்பு ஆழம் குறைந்த ஓர் ஆறாகவே காணப்பட்டது. தற்போது மண் அரிப்பு காரணமாக, ஆற்றின் ஆழம் 50 அடியையும் தாண்டி விட்டது. இவ்வாறு மண்ணரிப்பு இடம்பெறுமானால், காலப்போக்கில் மேலும் ஆழமாகக்கூடிய ஆபத்தான சூழல் ஏற்படும். எனவே, இவ்வாறு மண்ணரிப்பு ஏற்படாத வகையில், தடுப்புச் சுவர்கள் அமைக்கப்படுவது முக்கியம் என விவசாயிகள் தமது கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இவ்வாறு, ஆறு ஆழமானால் நிலத்தடி நீர் மட்டமும் கீழிறங்கும் மிகமுக்கியமான ஆபத்து காத்திருக்கிறது. இதனால், சுற்றுச் சூழலில் இருக்கும் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு, வரட்சி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இது தொடர்பில், மேற்குறித்த பாலியாற்றுக்குக் குறுக்காகத் தடுப்புச் சுவர்களை அமைப்பதற்கான போதிய நிதிமூலங்கள் தங்களிடம் இல்லை எனவும் நிதி கிடைக்கும் பட்சத்தில் மேற்படி வேலைகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் எனவும் நீர்ப்பாசனத் திணைக்களம் பொறுப்புத் தெரிவித்துள்ளது.

எனவே, வவுனிக்குளத்தின் கீழ் உள்ள பாலியாற்றுக்குக் குறுக்காக தடுப்புச்சுவர் அமைப்பதற்கான நிதிமூலங்களை உருவாக்கிக் கொள்வது தொடர்பாக, பொறுப்புவாய்ந்த மட்டங்கள் அக்கறை செலுத்த வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

–யது பாஸ்கரன்

பா.ஜ.க, பா.ம.க, நாம் தமிழர் வேட்பாளர்களை விட

# அதிக வாக்குகள் பெற்ற 94 வயது மூதாட்டி



தமிழகத்தில் நகர்ப்புற உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின்படி, பெரும்பாலான இடங்களில் தி.மு.க கூட்டணி வெற்றிபெற்றுள்ளது. குறிப்பாக, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் தேர்தல் முடிவுகள் பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. தி.மு.க தனியாகவே 153 இடங்களில் வெற்றிபெற்றது.

இந்தத் தேர்தலில், சென்னை மாநகராட்சியில் ஐந்து சுயேச்சைகள் வெற்றிபெற்று பெரிய கட்சிகளைத் திரும்பிப் பார்க்க வைத்துள்ளன. இதில் ஒருசிலர், தி.மு.கவில் தம்மை இணைத்துக்கொண்ட நிலையில், 174வது வார்டில் போட்டியிட்ட 94 வயது மூதாட்டி காமாட்சி அம்மாள், 460 வாக்குகளைப் பெற்று அனைவரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளார். குறிப்பாக, பா.ஜ.க, நாம் தமிழர், பா.ம.க உள்ளிட்ட கட்சிகளின் வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளை விட இவர் கூடுதல் வாக்குகளைப் பெற்றுள்ளார் என்பது முக்கியத்துவம் வாய்ந்தாகப் பார்க்கப்படுகிறது.

கள்ளக்குறிச்சி:

## கருக்கலைப்பு மாத்திரை விழுங்கிய கர்ப்பிணி மரணம்



மருத்துவர்களின் ஆலோசனையை மீறி மாத்திரை சாப்பிட்டு கருவை கலைக்க முயன்ற கர்ப்பிணி மரணம்.

திருக்கோவிலூர் அருகே மருத்துவர்களின் ஆலோசனையை மீறி, தனியார் மருந்தகத்தில் கருக்கலைப்பு மாத்திரை வாங்கி, சாப்பிட்ட இளம்பெண் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

கீழப்பாடி கிராமத்தை சேர்ந்த சின்னத்தம்பி என்பவரது மனைவி செல்வி. 25 வயதுடைய இவருக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். மீண்டும் கர்ப்பமான செல்வி, ஐந்து மாத கர்ப்பிணியாக இருந்தார். மருத்துவ சோதனை செய்ததில் சிசுவுக்கு இருதய குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டதை அடுத்து, பல்வேறு மருத்துவமனைக்கு சென்று, கருக்கலைப்பு செய்ய முயன்ற போது அவர்கள் மறுத்துவிட்டனர்.

இதையடுத்து, மருந்தகத்தில் கருக்கலைப்பு மாத்திரை வாங்கி சாப்பிட்டிருக்கிறார். இதனால் இரத்தப்போக்கு ஏற்பட்டு, சுயநினைவு இழந்த செல்வியை, மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது வழியில் இறந்துவிட்டார்.

அல்வார்:

நடுவழியில் ரயிலை நிறுத்தி பூரி வாங்கிய

## ரயில் சாரதி வேலையை இழந்தார்

ராஜஸ்தானில், ரயில் கேட் அருகே ரயிலை நிறுத்தி பூரி, மசால் வாங்கிய என்ஜின் சாரதியின் செயல் சமூகவலைத்தளங்களில் வைரலானதை அடுத்து, ரயில் சாரதி உட்பட ஐந்து பேர் பணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

ஆல்வாரில் மூடப்பட்டுள்ள ரயில்வே கேட் அருகே, ரயில் சாரதி பயணியர் ரயிலை நிறுத்தும்போது, கேட் கீப்பர் ஓடிவந்து, சாரதியிடம் ஒரு பார்சலை கொடுக்கிறார். பின்னர் ரயில் புறப்படுகிறது.

விசாரணையில், அங்குள்ள கடையில் சுவையான பூரி, மசால் கிடைப்பதும், அதற்காக தினசரி காலை எட்டு மணிக்கு ரயிலை நிறுத்தி, இன்ஜின் சாரதி அதை வாங்குவதும் தெரியவந்தது. இதையடுத்து, ரயில் சாரதிகள், கேட் கீப்பர்கள் உள்ளிட்ட ஐந்து பேர் பணிநிறுத்தம் செய்யப்பட்டு உள்ளனர்.

புதுடெல்லி:

## போரை நிறுத்த உதவுமாறு இந்தியாவிடம் கோரிக்கை

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்ததையடுத்து, இந்தியாவுக்கான உக்ரைன் தூதர், போரை நிறுத்த உதவுமாறு இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியாவுக்கான உக்ரைன் தூதர் இகோர் பொலிகா, “இந்தியா, ரஷ்யாவுடன் தனித்துவமான உறவைக் கொண்டுள்ளது. தற்போதைய சூழலை கட்டுப்படுத்துவதில், புதுடெல்லியால் இன்னும் அதிகமாகப் பங்களிக்க முடியும். ரஷ்ய ஜனாதிபதி பூட்டினையும் எங்களது ஜனாதிபதி ஜெலென்ஸ்கியையும் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு, பிரதமர் மோடியை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்” எனத் தெரிவித்துள்ளார்.

இதுஇவ்வாறிருக்க, உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வருவது, சர்வதேச சந்தையில் மட்டுமின்றி இந்திய பொருளாதாரத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன்படி, சுமார் எட்டு ஆண்டுகளுக்கு பிறகு, கச்சா எண்ணெய் விலை 100 டொலரைத் தொட்டது. கச்சா எண்ணெய் விலை உயர்ந்ததையடுத்து, இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை கடுமையாக உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதேபோல், இந்திய பங்குச் சந்தைகளும் கடும் சரிவைச் சந்தித்துள்ளன. மும்பை பங்குச் சந்தை சென்செக்ஸ் 2,000 புள்ளிகளும் தேசிய பங்குச் சந்தை நிஃப்டி 600 புள்ளிகளும் சரிந்துள்ளன. பங்குச்சந்தைகள் சரிவால் முதலீட்டாளர்களுக்கு பல இலட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன. மேலும், போர் காரணமாக முதலீட்டாளர்கள் அச்சமடைந்து தங்கள் முதலீடுகளை வெளியே எடுக்கின்றனர்.

தங்கம், வெள்ளியின் விலையும் உயர்ந்துள்ளது. போர் தொடங்கிய சில மணி நேரங்களில் இந்திய பொருளாதாரத்தில் பெருத்த தாக்கம் ஏற்படுத்தியுள்ள நிலையில், போர் தொடர்ந்து நீடித்தால் இந்திய பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கும் என்று பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

புதுடெல்லி:

விஜய் மல்லையா உள்ளிட்டோரிடம்

## 18,000 கோடி ரூபாய் மீட்பு



தொழிலதிபர்கள் விஜய் மல்லையா, நிரவ் மோடி போன்றோர் தொடர்பான மோசடி வழக்குகளில், வங்கிகள் 18 ஆயிரம் கோடி ரூபாயை மீட்டுள்ளதாக உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

சட்ட விரோத பணப் பரிமாற்ற சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை அமலாக்கத் துறை தவறாக பயன்படுத்துவது தொடர்பான வழக்கின்போது, மத்திய அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், சட்ட விரோத பணப் பரிமாற்ற சட்டத்தின் கீழ், விஜய் மல்லையா, நிரவ் மோடி போன்றோர் மீது தொடர்ந்த மோசடி வழக்குகளில், 18 ஆயிரம் கோடி ரூபாயை வங்கிகள் மீட்டுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருப்புவனம்:

## கீழடியில் திறந்தவெளி கண்காட்சி



கீழடியில் திறந்தவெளி அருங்காட்சியகத்தை பார்வையிட நேற்று (24) முதல் பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என தொல்லியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கீழடியில் ஏழாம் கட்ட அகழாய்வு பணிகள் செப்டெம்பர் மாதம் முடிவடைந்தன. இந்த அகழ்வாய்வு தளங்கள் திறந்தவெளி அருங்காட்சியகமாக மாற்றப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

மக்கள் பார்வையிடுவதற்கு வசதியான பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, நேற்று முதல் பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். கீழடியில் ஏழாம் கட்ட அகழ்வாய்வில் எட்டுக் குழிகள் தோண்டப்பட்டு சிவப்பு நிற பானை, மீன் உருவம் பதித்த உறைகிணறு, மண் கிண்ணங்கள், தந்த பகடை, சுடுமண் பகடை, முத்திரை நாணயம், செப்பு காய்கள், பானை ஓடுகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் கண்டறியப்பட்டன. தற்போது அகழ்வாய்வு குழிகளில் உள்ள பானைகள், உறைகிணறுகள், மண் கிண்ணங்களை பார்வையாளர்கள் நேரில் கண்டு இரசிக்கலாம்.

மும்பை:

## ‘ஐ லவ் யூ’ தவறில்லை

மும்பையை சேர்ந்த 23 வயது இளைஞர், 17 வயது பெண்ணுக்கு 2016இல், ‘ஐ லவ் யூ’ எனக்கூறி தன் காதலை வெளிப்படுத்தினார். பெண்ணின் பெற்றோருக்கு இந்த விவரம் தெரிந்ததும் பொலிஸில் புகார் அளித்தனர். இந்த வழக்கு, நேற்று முன் தினம் (23) விசாரணைக்கு வந்தபோது, “சம்பவம் நடந்த அன்று, புகார் அளித்துள்ள பெண்ணிடம் குற்றஞ்சாட்டப்பட்ட இளைஞர், ‘ஐ லவ் யூ’ என கூறியுள்ளார். தன் காதலை வெளிப்படுத்த ஒரு முறை, ‘ஐ லவ் யூ’ சொல்லி உள்ளார். இதில் தவறேதும் இல்லை. இது பெண்ணின் கண்ணியத்தை அவமதிப்பதாக கருத முடியாது. பெண்ணுக்கு பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்கள் அல்லது அச்சுறுத்தல் விளைவித்ததற்கான ஆதாரங்களும் இல்லை. எனவே, குற்றஞ்சாட்டப்பட்ட இளைஞரை இந்த நீதிமன்றம் விடுவிக்கிறது” இவ்வாறு உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

SLT குழுமத்தின் வரிக்குப் பிந்திய இலாபம்

# ரூ. 12.2 பில்லியனாக பதிவு



Mr. Rohan Fernando
Group Chairman – SLT

Mr. Lalith Seneviratne
GCEO - SLT

Mr Janaka R Abeysinghe
CEO - SLT

Mr. Chandika Vitharena
CEO - Mobitel

ஸ்ரீ லங்கா ரெலிகொம் பிஎல்சி (SLT) குழுமம், டிசெம்பர் 31, 2021 உடன் நிறைவடைந்த நிதியாண்டில் வரிக்குப் பிந்திய இலாபம் ரூ. 12.2 பில்லியனை பதிவு செய்திருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 54.3% வளர்ச்சியாகும். அக்காலப்பகுதியில் மொத்த வருமானமாக ரூ. 102.3 பில்லியனைப் பதிவு செய்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிறுவனத்தின் மொத்த வருமானம் 12.3% வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

குழுமத்தின் இலாபத்தில் அதன் பல்வேறு வியாபாரப் பிரிவுகளின் உயர் பெறுபேறுகள் பங்களிப்பு வழங்கியிருந்தன. மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் குழுமத்தின் EBITDA பெறுமதி 16.6% வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது. நிறுவனத்தின் தொழிற்படு இலாபம் 19.0% வளர்ச்சியடைந்திருந்தது. ஃபைபர் இணைப்பை (FTTH) விரிவாக்கம் செய்வது தொடர்பில் SLT இன் முதலீடுகள் மற்றும் 4G/LTE வலையமைப்பில் பெருமளவான விரிவாக்கங்கள் மற்றும் மேம்படுத்தல்கள் போன்றன புரோட்பாண்ட் வருமானத்தில் அதிகளவு வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தன. மேலும், தரமான கல்வி மற்றும் களிப்பூட்டும் நிகழ்ச்சிகள் போன்றவற்றை வழங்குகின்றமைக்காக PEO TV சந்தையில் வளர்ச்சி பதிவாகியிருந்ததுடன், வருமானத்தில் அதிகரிப்பையும் பதிவு செய்திருந்தது. SLT-MOBITEL இன் சர்வதேச அலகான Xyntac ஒட்டு மொத்த வியாபாரத்திற்கும் வலிமை சேர்ந்திருந்தது. புதிய SEA-ME-WE 6 கேபிளில் முதலீடு மேற்கொள்வதனுடாக, இலங்கையின் சர்வதேச இணைப்புத் திறனை அடுத்த நிலைக்கு கொண்டு செல்வதற்கு ஏதுவாக அமைந்திருந்தது. நவீன வசதிகள் படைத்த டேட்டா நிலையத்தினூடாக (data center), SLT-MOBITEL இன் டிஜிட்டல் (Digital) ஆற்றல்கள் மேம்படுத்தப்பட்டிருந்ததுடன், Akaza multi-cloud இனாலும் நிறுவனத்துக்கு தொடர்ந்தும் பெறுமதி சேர்க்கப்பட்டிருந்தது.

SLT குழுமத்தின் தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், “2021 ஆம் ஆண்டை மீட்டுப் பார்க்கையில், நாம் எதிர்பார்த்ததை விட உயர்ந்த பெறுமதிகளைப் பதிவு செய்துள்ளோம் என்பதை பெருமையுடன் அறியத்தருகின்றேன். நிதியியல் பிரிவின் சகல அம்சங்களிலும் இதுவரை பதிவு செய்திருந்த உயர்ந்த பெறுமதியை நாம் எய்தியிருந்ததுடன், கூட்டாண்மை ஆளுகையிலும் அனைத்துக்கும் மேலாக தேசிய பொறுப்பிலும் சிறந்த பெறுபேறுகளைப் பதிவு செய்திருந்தோம்.

பூஜ்ஜிய மோசடி, கழிவுக் கட்டுப்பாடு, உயர் வினைத்திறன் மற்றும் உள்ளடக்கமான நிர்வாகம் போன்றவற்றில் நாம் கவனம் செலுத்தியிருந்ததன் காரணமாக 2021 ஆம் ஆண்டில் சகல தடைகளையும் எம்மால் தகர்த்து முன்னேற முடிந்தது. எதிர்காலத்தில் போட்டியை எதிர்கொள்வது மற்றும் SLT குழுமத்துக்கு வாடிக்கையாளர்களை இணைப்பது போன்றவற்றில் நாம் கவனம் செலுத்துவோம். தொலைத்தொடர்பு என்பதிலிருந்து தொழில்நுட்பம் எனும் நிலைக்கு எமது வியாபாரத்தை மாற்றியமைப்பதில் நாம் கவனம் செலுத்துவோம். அதனூடாக எமது வியாபாரத்தில் நேரடியாக தொடர்பைக் கொண்டுள்ள பல்வேறு தொழில்நுட்ப அம்சங்களை உள்வாங்குவோம்.

உலகில் மிகவும் சக்தி வாய்ந்த நிறுவனங்களாக தொழில்நுட்ப நிறுவனங்கள் காணப்படுகின்றன. உலகின் பொருளாதாரத்தை வழிநடத்துவதுடன், மனிதர்களுக்கு தேவைப்படும் சகல அத்தியாவசிய சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் பங்களிப்பு வழங்குகின்றன. SLT-MOBITEL ஐச் சேர்ந்த நாம் தொழில்நுட்பத்தை மையப்படுத்தி இயங்குவதுடன், இலங்கையில் தொழில்நுட்பத்தை வழிநடத்திச் செல்லக்கூடிய சிறந்த நிலையில் காணப்படுகின்றோம்” என்றார்.

2021 நான்காம் காலாண்டில் குழுமத்தின் வருமானம் முன்னைய நிதியாண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 7.5% இனால் அதிகரித்து ரூ. 25.7 பில்லியனாக பதிவாகியிருந்தது. EBITDA மற்றும் தொழிற்படு இலாபம் (Operating Profit) என்பன முறையே 21.3% மற்றும் 34.8% இனால் அதிகரித்திருந்தன. காலாண்டில் குழுமத்தின் வரிக்குப் பிந்திய இலாபம் (PAT) ரூ. 3.0 பில்லியனாக அதிகரித்திருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 162.9% வளர்ச்சியாகும்.

# யூனியன் அஷ்யூரன்ஸ் 300 MDRT தகைமையாளர்கள் பதிவு




யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி, இலங்கையின் காப்புறுதி வரலாற்றில் இதுவரை பதிவாகியிருந்த ஆகக்கூடிய MDRT தகைமையாளர்கள் எண்ணிக்கையான 300 பேரை பதிவு செய்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளதாக அறிவித்துள்ளது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை 74 சதவீத அதிகரிப்பாகும்.

சிறந்த ஐந்து (5) Top of the Table தகைமையாளர்கள், இருபது (20) Court of the Table தகைமையாளர்கள் மற்றும் இருநூற்று எழுபத்தைந்து (275) MDRT தகைமையாளர்களை பதிவு செய்து, துறையின் முன்னோடி எனும் நிலையை நிறுவனம் எய்தியுள்ளது.

சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆயுள் காப்புறுதி மற்றும் நிதிச் சேவைகள் துறையின் நியமச் சிறப்பை உறுதி செய்வதில் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சுயாதீன மற்றும் சர்வதேச கௌரவிப்பாக MDRT அமைந்துள்ளது. அதன் ஊழியர்கள் குறிப்பிட்டளவு தரகு மற்றும் வருமானத்தை எய்த வேண்டும் என்பதுடன், நிபுணத்துவ அறிவு, கண்டிப்பான ஒழுக்கமான நடத்தை மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவை ஆகியவற்றை வெளிப்படுத்த வேண்டும்.

சாதனையாளர்கள் தொடர்பில் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜூட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், “கொவிட்-19 தொற்றுப் பரவலுடன் எழுந்திருந்த சவால்களுக்கு மத்தியிலும், காப்புறுதி மற்றும் நிதிச் சேவைகள் நிபுணர்கள் உயர்ந்த கௌரவிப்பைப் பெற்று இலங்கையில் 1 ஆம் தர MDRT சாதனையாளர் எனும் நிலையை எய்தியுள்ளமை உண்மையில் எனக்கு மிகவும் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

300 சாதனையாளர்கள் எனும் உயர்ந்த எண்ணிக்கையை பதிவு செய்துள்ளமையானது, நாளாந்தம் எமது வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை வென்றபங்காளர்கள் எனும் நிலையை எய்தும் வகையிலான எமது ஆலோசகர்களின் சிறந்த பணியை வெளிப்படுத்தியுள்ளது. எமது ஆலோசகர்களுக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், உயர்ந்த ஒழுக்க விதிமுறைகளைப் பின்பற்றி சிறந்த வினைத்திறனைப் பதிவு செய்வதில் பங்காற்றியிருந்த எமது சகல ஆலோசகர்களுக்கும் எனது நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது வாடிக்கையாளர்களுக்கு தமது கனவுகளை எய்துவதில் உதவிகளை வழங்கக்கூடிய வகையில் எமது ஆலோசகர்களின் வினைத்திறனைக் கட்டியெழுப்புவதில் நாம் தொடர்ந்தும் ஆதரவளிக்க வேண்டும். எம்மீது நம்பிக்கை கொண்டுள்ள வாடிக்கையாளர்கள் மீது நாம் என்றும் நன்றி தெரிவிக்கின்றோம்” என்றார்.

> **சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆயுள் காப்புறுதி மற்றும் நிதிச் சேவைகள் துறையின் நியமச் சிறப்பை உறுதி செய்வதில் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சுயாதீன மற்றும் சர்வதேச கௌரவிப்பாக MDRT அமைந்துள்ளது**

விற்பனைச் செயலணியினருக்கு சிறந்த வாடிக்கையாளர் அனுபவங்களைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய வகையில் அவர்களுக்கு வலுவூட்டும் வகையில் பயிற்சித் திட்டங்களை முன்னெடுப்பதிலும், நவீன தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும், தொழிற்றுறையின் முன்னோடியான கௌரவிப்புகளை வழங்குவதிலும் நிறுவனம் தொடர்ந்தும் உறுதியாக கவனம் செலுத்தி வருகின்றது.

யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் பிரதம விநியோக அதிகாரி செனத் ஜயதிலக கருத்துத் தெரிவிக்கையில், “பிரிவுகள் MDRT தகைமையாளர்களின் எண்ணிக்கை சாதனை மிகுந்த பெறுமதியை எய்தியுள்ளமையையிட்டு முகவர் மற்றும் கூட்டாண்மை வியாபாரப் பிரிவு மிகவும் பெருமை கொள்கின்றது. யூனியன் அஷ்யூரன்ஸ் முகவர்கள் மற்றும் நிதி ஆலோசகர்கள் உயர்ந்த நிலையை எய்துவதை உறுதி செய்வதில் யூனியன் அஷ்யூரன்ஸ் காண்பிக்கும் அர்ப்பணிப்பை இது மேலும் உறுதி செய்துள்ளது. அறிவார்ந்த, செயற்திறன் மிக்க, ஒழுக்கமான விற்பனை ஊழியர்கள் சேவைச் சிறப்பின் மையமாகத் திகழ்கின்றனர் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளோம். சிறந்த வாடிக்கையாளர் சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதில் யூனியன் அஷ்யூரன்ஸ் காண்பிக்கும் முக்கியத்துவத்தை மேலும் உறுதி செய்யும் வகையிலும், சர்வதேச நியமங்களை நிறுவனம் தொடர்ச்சியாக எய்துவதை உறுதி செய்யும் வகையிலும் UA Premier Club இன் அறிமுகம் அமைந்துள்ளது” என்றார்.

சம்பியன்ஸ் லீக்:

# சமநிலையில் அத்லெட்டிகோ யுனைட்டெட் போட்டி



சம்பியன்ஸ் லீக் தொடரில், ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான அத்லெட்டிகோ மட்ரிட்டின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான இறுதி 16 அணிகளுக்கிடையிலான தமது முதலாவது சுற்றுப் போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் சமப்படுத்தியிருந்தது.

யுனைட்டெட் சார்பாகப் பெறப்பட்ட கோலை அந்தோனி எலங்கா பெற்றதோடு, அத்லெட்டிகோ சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜோவா பீலிக்ஸ் பெற்றிருந்தார்.



முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

## ஆப்கானிஸ்தானை வென்ற பங்களாதேஷ்

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் பங்களாதேஷ் வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட தொடரில், சட்டோகிராமில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தானின் அணித்தலைவர் ஹஷ்மதுல்லாஹ் ஷகிடி, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான், 49.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 215 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், நஜிபுல்லாஹ் ஸட்ரான் 67 (84), ரஹ்மத் ஷா 34 (69), ஹஷ்மதுல்லாஹ் ஷகிடி 28 (43) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், முஸ்தபிசூர் ரஹ்மான் 3, தஸ்கின் அஹ்மட், ஷகிப் அல் ஹஸன், ஷொரிஃபுல் இஸ்லாம் ஆகியோர் தலா 2, மகமதுல்லா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு, 216 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், பஸல்ஹக் பரூக்கியிடம் வரிசையாக விக்கெட்டுகளை பறிகொடுத்து ஒரு கட்டத்தில் 45 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்தவாறு காணப்பட்டபோதும், அஃபிஃப் ஹொஸைனின் ஆட்டமிழக்காத 93 (115), மெஹிடி ஹஸன் மிராஸின் ஆட்டமிழக்காத 81 (120) ஓட்டங்களோடு 48.5 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், பரூக்கி 4, முஜீப் உர் ரஹ்மான், ரஷீட் கான் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.



## வென்ற வெகுஜன ஊடக கிரிக்கெட் அணி

அஸ்ஹர் இப்றாஹிம்

2022 பொதுச் சேவை கிரிக்கெட் போட்டிக்கு இணையாக ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சிக்கு முந்திய 40 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியானது பாதுக்க பொரேகெதர மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

மஞ்சுள சூரியா தலைமையிலான ஊடக அமைச்சின் கிரிக்கெட் அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தொழிலாளர் துறை கிரிக்கெட் அணி 32 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, 148 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய வெகுஜன ஊடக கிரிக்கெட் அணி 18 ஓவர்களில் 4 விக்கட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## பேர்ண்லியிடம் வீழ்ந்த டொட்டென்ஹாம்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், பேர்ண்லியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் தோல்வியடைந்தது.

பேர்ண்லி சார்பாகப் பெறப்பட்ட கோலை பென் மீ பெற்றிருந்தார்.

அந்தவகையில், பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 63 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி காணப்படுகின்றது. 60 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் லிவர்பூலும், 50 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் செல்சியும், 46 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டெட்டும் காணப்படுகின்றன. இதில், செல்சி ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.





மர்ஹூம் கே.ஏ.பாயிஸ் வெற்றிக் கிண்ணத் தொடர்:

## லிவர்பூலுக்கு முதல் வெற்றி

எம்.யூ.எம். சனூன்

புத்தளம் கால்பந்தாட்ட லீக் புத்தளத்தில் நடாத்தும் கே.ஏ. பாயிஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது போட்டியில் புத்தளத்தின் பலம் வாய்ந்த அணியான லிவர்பூல் அணி வெற்றி பெற்றுள்ளது.

புத்தளம் ஒடிடாஸ் அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வென்றதன் மூலம் தனது முதலாவது வெற்றியைப் பதிவு செய்து மூன்று புள்ளிகளை லிவர்பூல் பெற்றது.

இப்போட்டியானது புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்றது.

பிரேஸில்

வெள்ளம், நிலச்சரிவுகளால்

# உயிரிழந்தோரின் எண்ணிக்கை 186ஆக உயர்ந்தது

பிரேஸிலிய நகரமான பெற்றோபொலிஸில் வெள்ளம், நிலச்சரிவுகளால் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 186ஆக உயர்ந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுற்றுலா நகரான பெற்றோபொலிஸை பருவகால மழை தாக்கிய ஒரு வாரத்திலேயே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களை சேற்றை மற்றும் சிதைவுகளைத் தோண்டி மீட்புப் பணியாளர்கள் தேடியிருந்தனர்.

இதேவேளை, தற்போது வரையில் காணாமல்போனோரின் எண்ணிக்கையானது 69ஆகக் காணப்படுகின்றது.



இந்நிலையில், 850 பேர் தங்களது வீடுகளை இழந்துள்ளனர் அல்லது அவசரகாலநிலை கூடாரங்களில் தங்கியுள்ளனர்.



ஹெய்ட்டி

## ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் பிரயோகம்

### ஊடகவியலாளரொருவர் கொல்லப்பட்டார்

உயர் வேதனத்தை வலியுறுத்துகின்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது ஹெய்ட்டி பொலிஸார் நேற்று முன்தினம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதுடன், ஊடகவியலாளரொருவரைக் கொன்றுள்ளதாக சம்பவத்தை கண்ணுற்றவர்களும், வைத்திய அதிகாரியொருவரும் தெரிவித்துள்ளனர்.

வேறு இரண்டு சுடப்பட்ட ஊடகவியலாளர்கள் சம்பவ இடத்திலேயே காயமடைந்துள்ளனர். ஆர்ப்பாட்டக்காரர்களைத் தாண்டிய பொலிஸ் வாகனமொன்றே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக சம்பவத்தைக் கண்ணுற்றோர் தெரிவித்துள்ளனர்.

ஐ. அமெரிக்க உதவியை எதிர்க்கும்

நேபாளம்

## ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பொலிஸார் மோதல்

500 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் உதவி தொடர்பான விவாதத்தை நேபாளப் பாராளுமன்றமானது நேற்று ஒத்தி வைத்துள்ளது.

இந்த உதவியானது இறையாண்மையைக் கேள்விக்குட்படுத்துவதாக விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இதற்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்கள் பாராளுமன்றத்துக்கு வெளியே பொலிஸாருடன் முரண்பட்டதாக சம்பவத்தைக் கண்ணுற்றவர்கள் கூறியுள்ளனர்.

மின் பரிமாற்ற இணைப்பு, வீதி மேம்பாட்டுத் திட்டத்துக்கு நிதியளிப்பதற்கு கடந்த 2017ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்க அரசாங்க உதவி முகவரகமான த மிலேனியம் சலஞ்ச் கோப்ரேஷன் இணங்கியிருந்தது.

**“ இந்த உதவியானது மீளச் செலுத்தப்படத் தேவையில்லை என்பதுடன், நிபந்தனை இல்லாமல் வருவதாக ஐ. அமெரிக்க அரசாங்கம் தெரிவித்துள்ளது**

இந்த உதவியானது மீளச் செலுத்தப்படத் தேவையில்லை என்பதுடன், நிபந்தனை இல்லாமல் வருவதாக ஐ. அமெரிக்க அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இதை எதிர்ப்பவர்கள் பிராந்தியத்தில் ஐக்கிய அமெரிக்க ஆதிக்கம் குறித்து அஞ்சுகின்றனர்.






கனடா

## ‘இறப்பின்போது கண்களின் முன்னால் வாழ்க்கை புலப்படும்’

நாங்கள் இறக்கும்போது எமது கண்களின் முன்னால் வாழ்க்கையானது புலப்படும் என விஞ்ஞான விபத்து ஒன்றின் தரவு வெளிப்படுத்தியது.

வலிப்பு நோயைக் கொண்டிருந்த 87 வயதான நோயாளரின் மூளை அலைகளை அளவிட விஞ்ஞானிகள் அணியொன்று காத்திருந்த நிலையில், நரம்பியல் பதிவுகளின்போது அவருக்கு உயிரிழப்பை ஏற்படுத்திய மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. அந்தவகையில், எதிர்பாராத வகையில் மூளைச் சாவடைவது பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆக, இறப்பதற்கு 30 செக்கன்களுக்கு முன்னரும் பின்னரும் மூளை அலைகளானவை கனவு காண்பது அல்லது நினைவுகளை மீளக் கொண்டு வருபவை போன்றவை போலத் தென்பட்டுள்ளன.

அந்தவகையில், ஒரு நபரின் இறுதித் தருணங்களில் இறுதியாக வாழ்க்கையாக நினைவுகூருவது போன்ற மூளைச் செயற்பாட்டு ஏற்பட்டுள்ளது என இந்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஐ. அமெரிக்கா

தவறுதலாக 13 நாள்கள் சிறை:

## லொஸ் ஏஞ்சலஸில் வழக்குத் தொடர்ந்த பெண்



ஒரே பெயரைக் கொண்டிருந்த நபரொருவருக்காக தான் தவறுதலாக எடுக்கப்பட்டதாகத் தெரிவித்த ஐக்கிய அமெரிக்காவின் கலிபோர்னியாப் பெண்ணொருவர், பின்னர் 13 நாள்கள் சிறையில் வைக்கப்பட்டிருந்ததாக கடந்த செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்யப்பட்ட சிவில் உரிமைகள் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது.

லொஸ் ஏஞ்சலஸ் விமான நிலையத்தில், மெக்ஸிக்கோவின் புவெர்ட்டோ எஸ்கொன்டிடோவில் விமானமொன்றுக்காகக் காத்திருக்கும்போதே கடந்தாண்டு ஏப்ரல் 16ஆம் திகதி இச்சம்பவம் ஆரம்பித்துள்ளது.

லொஸ் ஏஞ்சலஸ் பொலிஸ் திணைக்களம், விமானநிலையப் பொலிஸாருக்கு எதிராகவே இவ்வழக்குத் தக்கல் செய்யப்பட்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 25 பெப்ரவரி 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.